31-1

உ

திருமயிலையும் பூம்பாவையும்

ஆக்கியோன் :

வித்துவான்
G. M. முத்துசாமி பிள்ளை, I.A.S. (Rtd.)

சைவ சித்தாந்த மகா சமாஜம்
12, கிழக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை-4

உ

திருமயிலையும் பூம்பாவையும்

ஆக்கியோன் :

வித்துவான்

G. M. முத்துசாமி பிள்ளை, I.A.S. (Rtd.)

சைவ சித்தாந்த மகா சமாஜம்
12, கிழக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை-4

10 பிரதிகள் 4 ரூபாய்] [தனிப்பிரதி 50 காசுகள்


அமுர்தா அச்சகம், சென்னை-24.

31-1

பொருளடக்கம்

பாகம் — I திருமயிலை

பாகம் — II பூம்பாவை



மயிலைத்திருக்கோயில்—உட்புறத்தோற்றம்

31-1

உ

குருபாதம்

மதிப்புரை

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே"

பழம் பெருமையும் புதுப் பொலிவும் பெற்றுத் திகழும் தலங்கள் சிலவே உள்ளன. அவற்றுள் முதலிடம் பெற்று விளங்குவது திருமயிலாப்பூர். இத்தலம் சரித்திரச் சிறப்பு, சமய வரலாற்றுச் சிறப்பு முதலியன பெற்றுத் திகழினும், அவற்றுள் "பூம்பாவை" வரலாற்றுச் சிறப்பே அனைத்து மக்கள் உள்ளத்திலும் இடம் பெற்று மிளிர்வதாகும்.

அவ்வங்கம் பூம்பாவை வரலாற்றை இனிய இலக்கிய உயர் நடையில் "நாடகமாக" இயற்றியுள்ள வித்துவான். திரு ஜி. எம். முத்துசாமி பிள்ளையவர்கள் I. A. S. (Rtd) இலக்கிய இலக்கணப் புலமையும். சிவநெறிப் பற்றும், சைவ ஒழுக்கத் திறனும் நிறையப் பெற்றவர்கள்.

சேக்கிழார் சுவாமிகளின் வாக்கையே ஆதாரமாகக்கொண்டு இயற்றிய இந்நூல் உயரிய நாடக நூலாகத் திகழ்வதுடன், மயிலாப்பூர் மாண்பை விளக்கும் மாட்சியுடையதாகவும் விளங்குகிறது.

இதனைச் சைவம் வளர்க்கும் சைவ சித்தாந்த சமாஜம் வெளியிடுவது சாலப் பொருத்தமாகும். இந்நூலைத் தமிழர் பலரும் பெற்றுக் கற்று நலமடைந்து ஆக்கியோரையும் இத்துறையில் மேன்மேலும் ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தருமபுர ஆதீன
சமயப் பிரசார நிலையம்
41, உஸ்மான் சாலை
தியாகராய நகர்,
சென்னை-17.
12—3—1965

அன்புள்ள,

சோமசுந்தரத் தம்பிரான்.

பதிப்புரை

திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, I.A.S., (Rtd) எழுதிய இந்நூல் சைவ சித்தாந்த சமாஜ வெளியீடாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூல் நன்முறையில் பயனாகுமென நம்புகிறேன்.

சைவ சித்தாந்த சமாஜம்,
12, கிழக்கு மாடத் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

கொ. நீ. சிங்காரவேலு
செயலாளர்.

துவக்கவுரை

"பெரிது, பெரிது, புவனம் பெரிது" எனத் தொடங்கித் "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்னும் பேருண்மையைக் கூறி முடிக்கின்றார் ஒளவைப் பிராட்டியார். தொண்டர் எனப் பெறுபவர் மெய்யடியார்களே ஆவர். மெய்ப்பொருள் ஒன்று உண்டோ? இல்லையோ? என்று ஐயுற்று வாழ்நாளை வீணாகக் கழிப்போருக்கு மெய்ப்பொருள் ஒன்று உண்டென நிலை நாட்டுபவர்கள் இத்தகைய மெய்யடியார்களே ஆவர். அங்கிங்கெனாதவாறு எங்கும் நீக்கமற எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நிறைந்து நிற்கின்றார் எனினும், சமுதாயத்திடையே அவ்வப்போது தோன்றும் அறியாமையும்—அகங்காரமும், ஆசையும்—ஆணவமும், கொடுமையும்—கோபமும், துக்கமும்—துன்பமும், மக்கள் மெய்ந்நெறியில் நின்று இறைவன் திருவருளைப் பெறுதற்கு இடையூறாக நிற்கின்றன. இந்நிலையில், இறைவனது திருவருளைப் பெறத்தக்க வழி இதுவென மெய்யடியார்கள் தாங்களே வாழ்ந்து வழிகாட்டுவதுடன் தங்கள் இன்னுரையால், இன்னிசைப் பாடல்களால் மக்களை

நல்வழிப்படுத்துவர் ; மறுமைக்கும் வழிவகுத்துத் தருவதோடன்றி, இம்மையில் ஆங்காங்கு தோன்றும் வறுமையைப் போக்குவர் ; நோயை நீக்குவர் ; துன்பத்தைத் துடைப்பர் ; ஆறுதல் அளிப்பர்; இவர்கள் தாங்கள் இறைவனிடத்துக் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பால் இயற்கை விதிகளுக்கும் அப்பாற்பட்ட அற்புதங்களை இயற்றவல்ல ஆற்றலுடையவர்களாகத் திகழ்வர். இத்தகைய மெய்யடியார்களைப் பெறும் நாடு புண்ணிய நாடாகின்றது. சுருங்கக் கூறுமிடத்து இம்மெய்யடியார்கள் தோற்றத்திஞல் உலகமே உய்கிற தெனலாம். இவ்வாறு தோன்றிய மெய்யடியார்களில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய இந்நால்வரும் சமய ஆசிரியர்களாக விளங்குகின்றனர். தமது மூனரும் வயதில் ஞானப்பால் பருகிச் சிவபெருமானைச் சுட்டிக் காட்டிய பெருந்தகையார் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆவர். அடியார்கள் பலர் உடன்வர, பல தலங்களுக்குச் சென்று இறை வழிபாடு செய்து சைவ சமயத்தை நிலைநாட்டியவர்களில் முதல்வர் இவரே யாவர். இத்தகைய ஆசிரியர் அருளிய பாடல்கள் பதிஞருயிரம் என்பர் ஆன்ரூேர். எனினும் பிற்காலத்தில் கல்வெட்டு வழியாகக் கிடைக்கப் பெற்ற பதிகத்துடன் சேர்த்து 4235 பாடல்களே கிடைக்கப் பெற்றுள்ளோம். இப்பதிகங்கள் பன்னிருதிருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. இத் தெய்வப் பாடல்களில் இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழும் விரவி அமைந்திருப்பதால் இவருக்கு "முத்தமிழ் விரகர்" என்னும் பெயரும் வழங்கப் பெறுகிறது. ஆராய்ச்சியாளர் கண்டுள்ளவாறு ஏழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் திகழ்ந்தவராகிய இப்புனிதர் பல

அற்புதங்களை இயற்றியுள்ளார். இவ்வற்புதங்களைத் திருக்களிற்றுப்படியார் என்னும் மெய்கண்ட சாத்திரம் தொகுத்துக் கூறுகின்றது.

"ஓடம் சிவிகை உலவாக்கிழி அடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்தல்—ஏடெதிர் வெப்பு
என்புக்குயிர் கொடுத்தல் ஈங்கிவைகாண் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்."

இவ்வற்புதங்களில் ஒன்று என்புக்கு உயிர் கொடுத்தல். இப்பேரற்புதம் இம்மா நிலத்தின் தலைநகரமாம் சென்னையம்பதிக்கேயுரியது. இவ்வற்புதத்தைப் பல பெரியார்கள் வியந்து போற்றியுள்ளார்கள்.

"............வெய்யவிடம்
மேவி யிறந்தவயில் வேற்கண் மடமகளை
வாவெள் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்துச்
சீர்நின்ற செம்மைச் செயலுடையான்."

என்று 11-ஆம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகளும்,

"எலும்பு பெண்ணுருவாகக் கண்டதும்"

எனத் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவரும்,

"அளகைவணி கேசர்குலத்தில் வனிதையுயிர்மீளழைப்ப
அருள்பரவு பாடல்சொற்ற குமரேசா"

எனத் திருப்புகழில் அருணகிரிநாதரும்,

"..........
என்பு பெண்ணுருவோடின்னுயிரது
கொண்டெழுந்திடப் புரிந்து உலகெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
யென்னுயிர்க் குயிரெனுங் குருவே"

எனத் தம் திருஅருட்பாவில் இராமலிங்க அடிகளும் இவ்வற்புதச் செயலைக் குறிப்பிட்டுக் காட்டுவது மறக்கற்பாலதன்று.

இத்தகைய பெருஞ் சிறப்புடைய இந்நிகழ்ச்சி ஞானசம்பந்தப் பெருமானல் என்பு பெண்ணுரு வாக்கப்பெற்ற கபாலீச்சரத்தின் பெருமையைப் பலரும் உணரும் வகையில் நாடக வடிவில் நடித்துக்காட்டப் பெறுமாயின் எல்லாருமே பயன் அடைவர் என்னும் கருத்தில் இதை ஒரு நாடக முறையில் அமைத்துக்கொடுக்குமாறு ஸ்ரீகபாலீச்சர ஆலய அறங்காவலர்கள் குழுத் தலைவர் திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார் J. P. அவர்கள் விரும்பினர்கள். அவ்விருப்பத்திற்கிணங்க, இச் சிறு நாடகத்தை "பூம்பாவை" என்னும் தலைப்பில் எனது சிற்றறிவுகொண்டு எழுதியுள்ளேன். இந் நாடகம் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்தில் உள்ள திருஞான சம்பந்தர் வரலாற்றுப் பகுதியை அனுசரித்தே ஆக்கப் பெற்றுள்ளது. திருஞான சம்பந்தர் அருளிய பாடல்களும் திருநாவுக்கரசர் பாடியருளிய பாடல்களும், பொருத்தமான திருவாசகப் பாடல்களும் இதில் கையாளப் பெற்றுள்ளன.

இந்நூல் முற்றிலும் நாடகமாக அமைய வேண்டுமென்பதாக முதலில் இதனை ஆரம்பித்தேன். ஆனல் நாடகத்தை எழுதி முடித்தபின, இந்நாடக நிகழ்ச்சிக்கு இருப்பிடமாகிய புனிதத் திருமயிலையின் சிறப்பைப் பற்றி விளக்கம் செய்யாது விடுதல் தவறென உணர்ந்தேன். ஆதலினல் திருமயிலையைப்பற்றிச் சிறப்பாகவுள்ளவற்றையெல்லாம் முதல் பாகத்திலும், பூம்பாவையைப் பற்றி நாம் அறிய வேண்டியவற்றை யெல்லாம் நாடக வடிவில் இரண்டாம் பாகத்திலும் அமைத்துக் கொண்டேன். நாடகம் நடிக்கப் பெறும் காலத்தில் நிகழ்ச்சிகளுக்கு இடை இடையே நகைச் சுவைப் பகுதிகளை அமைத்துக் கொள்ளுமுறை நீண்ட

நாட்களாக நம் நாட்டில் வழக்கமாக இருந்து வருகிறது. அவ்வழக்கத்தையும், இந் நாடகத்தில் அடங்கியுள்ள தெய்வீகக் கொள்கையையும் அனுசரித்து, பக்திச் சுவைப் பாடல்கள் கையாளப் பெற்றுள்ளன.

பக்தியைப் பெருக்கும் வகையில் நாடகங்கள் நடித்துக் காட்டப் பெறுவது நம் நாட்டிற்குப் புதிதன்று. முற்காலத்தில் சைவ அரசர்களைப் பற்றியும் நாயன்மார்களைப் பற்றியும், ஓரளவில் நாடகங்கள் நடிக்கப் பெற்றுள்ளன. திருப்பாதிரிப்புலியூரைப் பற்றிய நாடகம் முதல் குலோத்துங்கன் காலத்தில் இயற்றப் பட்டதை வரலாறு தெரிவிக்கின்றது. சைவ சமயத்தைப் பற்றியும் அடியார்களின் சிறப்பைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு இந் நாடகம் ஓரளவிலாயினும் உதவுமாகில், இந்நாடகம் எழுதியதன் நோக்கம் ஒருவாறு நிறைவேறியதாகக் கருதுவேன். இவ்வாறே, பழமைக்குப் பழம் பதியாகவும் புதுமைக்குப் புதிய நகரமாகவும் அமைந்துள்ள திருமயிலையின் பெருமையைத் திருமயிலை வாசிகள் மட்டுமென்றி இதர பகுதிகளில் வசிக்கும் நம் நாட்டவரும் பிற நாட்டவர்களும் அறிந்துகொள்வதற்கு இந்நூல் சிறிதளவாயினும் வழி வகுக்குமாயின் அதுவே பெரும்பேறு எனக் கொள்வேன்.

இந் நாடகத்தை நன்கு ஆராய்ந்து ஆங்காங்கு திருத்தங்களைச் செய்து உதவியவர் தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிகசுவாமிகள் ஆவார்கள். அவருக்கு என் நன்றி என்றும் உரித்து. சைவ சமயத்திற்குப் பொதுவாகவும், சைவசித்தாந்தமகா சமாஜத்திற்குச் சிறப்பாகவும் அரிய சேவைகள் புரிந்துவரும் திருமுறைகாவலர் திரு. அ. சோமசுந்தரம்செட்டியார் M.A. அவர்கள் இந்நாடகம் அச்சிடப்

படாமல் என்வசமே இருந்து வருகிறதென்பதை அறிந்து இந்நாடகம் வெளியிடுதல் நன்றென்றார். எனக்கு அவர்கள் காட்டிய ஊக்கமே இப்போது இதை வெளியிடுமாறு என்னைத் தூண்டிற்று.

இச் சிறுநூல் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் சார்பில் வெளியிடப்படுகிறது. மகா சமாஜத்தினருக்கு ஆழ்ந்த என் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன். சிவக்கவிமணியவர்கள் தந்துள்ள குறிப்புக்கள் எனக்குப் பெருந்துணையாக இருந்தன. இந்நூலை அணி செய்ய ஓரணிந்துரை எழுதியுதவியுள்ள தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளுக்கு யான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

"பூம்பாவை" தோன்றியதால் மிகுந்த சிறப்பெய்திய தலம் திருமயிலை. இத்திருமயிலையில் எழுந்தருளியுள்ள கபாலீச்சரப் பெருமான் ஆலய அறங்காவலர்கள் திருவாளர்கள், அய்யா சுப்பிரமணிய முதலியார். ப. வரதராஜ முதலியார். சை. அண்ணாமலை முதலியார் ஆகியோருக்கும் நிர்வாக அலுவலருக்கும் என் நன்றி என்றும் உரித்து.

இந் நாடகத்தை எழுதிவரும்போது அவ்வப்போது எனக்கு உதவி செய்த அன்பர் திரு. V. திருநாவுக்கரசுக்கும் என் நன்றி உரித்து.

உரிய கால அளவிற்குள் இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த அமுர்தா அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9, அபிராமபுரம்
II-ஆவது வீதி,
சென்னை-18.
11-3-1965

அன்புள்ள,
கோ. மு. முத்துசாமி

தோற்றுவாய்

இவ்வுலகினுக்குத் திருமுகம் போன்று விளங்குவது நம்நாடு. அதற்குத் திலகம் போல் காட்சியளிப்பது ஆங்காங்குள்ள திருக்கோயில்கள். கோயில் என்பது கோவில் என்பதன் திரிபு. கோ. தலைவன்; 'இல்' இறைவன் இருக்கும் இடம். ஆலயம் என்பது ஆன்மாக்கள் இறைவனிடம் லயிக்கும் இடம். இத்தகைய திருக் கோயில்களில் நடைபெறும் நித்திய வழிபாடுகள் சம்பந்தமாக எழும் மணி ஓசையும் காலமுறையாக நடைபெறும் திருவிழாக்களும் மக்களது உள்ளத்தைக் கவர்ந்தன. மக்களது பண்பாடும் வாழ்க்கைத்தரமும் இச்சூழ் நிலையில் வளம் பெற்றன. திருக்கோயில்கள், வழிபாட்டு நிலையங்களாக மட்டும் அல்லாமல், அறச் சாலைகளாகவும் நீதி மன்றங்களாகவும் பயனளித்து வந்தன. இவ்வகையில் எங்கெங்கு திருக்கோயில்கள் அமைந்தனவோ, அங்கங்கெல்லாம் பலவகையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆதலினல் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் முதுரைகள் நம்நாட்டு மக்களின் உள்ளத்தில் பதிந்தன. இவ்வகையில், திருக்கோயில் இல்லா ஊர் ஊரன்று; அது அடவி, காடே, என்னும் கருத்தை

" திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினெடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரு
மவை யெல்லா மூரல்ல அடவிகாடே"

என அப்பர் தெரிவிக்கின்றார்.

இத்தகைய சூழ் நிலைகளில் நம் மாநிலத்தின் தலை நகரமாகிய சென்னைக்குரிய திருமயிலையும் வளர்ச்சி பெற்றது. இத் திரு நகரத்திற்குச் சரித்திர ஆதாரத்துடன் சைவ சமயக் கொள்கைகள் அடங்கிய புராதனவரலாறும் இருக்கின்றது. திருமயிலை என்றதுமே அங்குள்ள கபாலீச்சரமே முதலில் நினைவிற்கு வருகின்றது.

1. சரித்திர உண்மை

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஆதாரம் ஒன்று திருமயிலையைப் பற்றித் தெரிவிக்கிறது. இவ்வாதாரம் கிரேக்க நாட்டு டாலமி (Ptolemy) என்போர் இயற்றிய பூகோள நூல் ஆகும். இதில் மல்லியார்ப (Malliarpha) என்னும் நகரம் குறிக்கப் படுகிறது. இந் நகரம் மயிலாப்பூர் ஆகும் என்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] சம்பந்தர் காலத்தவராகிய திருநாவுக்கரசு நாயனார் தம் தேவாரப் பாடல்களில். மயிலாப்பூரைக் குறிப்பிடும் வகையில் மூன்று இடங்களில் "மயிலாப்பு" என்று கூறுவதால் அவரதுகாலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் மயிலாப்பூர் "மயிலாப்பு" என்பதாக வழங்கப்பட்டிருந்தது எனக் கொள்ள ஆதாரம் இருக்கிறது. 1916-ஆம் ஆண்டு 261 எண் கல்வெட்டிலும் மயிலாப்பூர் மயிலாப்பு எனக் குறிக்கப் பட்டுள்ளது.

ஆர்தல் என்பது ஒலித்தல், மகிழ்தல் என்பதைக் குறிக்கும் ஆர்ப்பு - பேரொலி, மகிழ்ச்சி. மயில் பூசித்து மகிழ்ந்த இடம் என்பதை இச் சொல் குறிக்கும் எனலாம். அடுத்ததாக உள்ளது சரித்திர ஆதாரம். முதல் நூற்றாண்டு சோழனாகிய கரிகால் பெரு வளத்தான் தொண்டை நாட்டைத் தன்

[1] Vestiges of old Madras-4. H. D. Love Vol I chapter 23

ஆட்சியின் கீழ்க் கைக் கொண்டு இந் நாட்டைத் திருத்தி வளமாக்கினன் என்பதாகவும் அவனது ஆட்சியில் இந்நாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டன வென்பதாகவும் அக் கோட்டங்களில், தற் போதைய சென்னை மாநகருக்கு வடக்கேயுள்ள புழல் என்பதான ஊரைத் தலைமையிடமாகக் கொண்ட கோட்டத்தில் திருமயிலை சேர்ந்திருந்த தாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.[1] அந்நாளிலே அம்மன்னன் சோழநாட்டிலிருந்து பல வேளாள குடும்பங்களைப் இப் பகுதிகளில் குடியேற்றினன் எனவும் ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. இப்பகுதி இம்மன்னனது ஆட்சிக்குட் பட்டு இளந்திரையன் என்பவனால் பரிபாலிக்கப்பட்டு வந்தது எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இதற்கு ஆதாரம் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்திலுள்ளது. திருக் குறிப்புத் தொண்டர் புராணத்துள் காஞ்சிபுரத்தின் சிறப்பைக் கூறும் போது, இவ்வரலாற்றுச் செய்தியைச் சேக்கிழார் "என்றுமுள்ள இந்நகர் கலியுகத்தில் இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன், துன்திறற் புலி இமய மால்வரை மேல் ஏகுவோன் தனக்கிதன் வளமை, சென்றுவேடன் முன்கண்டுரை செய்யத்திருந்துகாத நான்குட்பட வகுத்துக் குன்றுபோலுமா மதில் புடை போக்கிக் குடியிருத்தின கொள்கையின்" என விளக்குவர்.

செங்கற்பட்டு மாவட்டத்திற்குச் சேர்ந்த கோவூர் குணம்பேடு முதலிய ஊர்களிலுள்ள பெருமக்கள் தாங்கள் இவ்வாறு குடியேற்றப் பட்டார்கள் எனக் கொள்கின்றனர் — உலகநாத பிள்ளை அவர்கள் இயற்றியுள்ள "கரிகாலன்"

அடுத்து நாம் காணத்தக்க ஆதாரம் பல்லவ மன்னர்கள் ஆட்சியைப் பற்றியதாகும். மூன்ரும் நூற்ருண்டு முதல் ஒன்பதாம் நூற்ருண்டு வரையில் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்ட பல்லவ ஆட்சியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பற்பல வகைக் கோயில்கள் கட்டப்பட்டன. குளங்கள் தோண்டப்பெற்றன. பல கோயில்கள் மேலும் மேலும் விளக்கம் பெற்றன. இத்தகைய பல்லவ ஆட்சிக்குட்பட்ட திருமயிலையும் முன்னேற்ற மடைந்திருந்தது என்பதைத் திருமங்கையாழ் வார் இயற்றியுள்ள திருவல்லிக்கேணிப் பத்திலும் நந்திக்கலம்பகத்திலும் காணலாம்.

11-ஆவது நூற்ருண்டிற்குரிய 1912-ஆம் ஆண்டு 256 எண் கல்வெட்டு, மயிலாப்பூரில், பல நாட்டி லிருந்து வந்தவர்கள் ஒன்றுகூடிச் சில தீர்மானங் கள் செய்தார்கள் என்பதாகத் தெரிவிக்கிறது. இதே ஆண்டிற்குரிய 189 எண் கல்வெட்டு, மயிலாப் பூரில் அரச குடும்பத்தினர் வாழ்ந்ததாகக் குறிப்பிடு கிறது,

மயிலாப்பூர் வாசிகளில் பலர் மற்ற ஊர்களுக் குச் சென்றிருந்தபோது ஆங்காங்குள்ள தலங்களில் வழிபாடு செய்த காலத்தில் திருவிளக்கு, நந்தா விளக்கு முதலிய திருப்பணிகள் செய்தனர் எனவும் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய திருப்பணிகள் செய்யக்கூடிய நிதி படைத்தவர்கள் திருமயிலையில் இருந்திருக்கிருர்கள் என்பதும் நன்கு தெரியவருகிறது. இதன் பின்னர், போர்ச்சு கீசியர் இந்நாட்டிற்கு வந்து இப்பகுதியில் அவர்கள் தங்கள் செல்வாக்கை நிலை நாட்டியதைச் சரித்திரம் எடுத்துக் கூறுகிறது.

இப்போது திருமயிலையில் கபாலீச்சர ஆலயம் உள்ள இடத்திற்கு கிழக்கே, இப்போது Santhome

Cathedral உள்ள இடத்தில், அருணகிரிநாதர் காலம் (கி.பி. 1450 ஆண்டு) வரையில் பழைய கோயில் இருந்ததாகவும், இவ்வுண்மை அருணகிரி நாதர் தமது திருப்புகழில் "கடல் கரைதிரையருகே சூழ் மயிலைப் பதி தனில் உறைவோனே' என்பதால் தெரியவரும் என்பதாகவும், கி.பி. 1516-ஆம் ஆண்டில் மயிலாப்பூர் போர்த்துகீசியர்கள் வசமான காலத்தில் இக்கோயில் தகர்க்கப் பட்டதென்பதாகவும், கி.பி. 1672-ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்போதுள்ள இடத்தில் இப்போதைய கோயில் கட்டப்பட்டதென்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். 1672-ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரில் பிரஞ்சு நாட்டுச் சேனையின் ஒரு பகுதி இப்போதுள்ள ஆலயத்தில் பதுங்கியிருந்ததென்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பழைய கோயில் இருந்த இடம் அகழ்ந்தெடுக்கப் பட்டபோது கிடைத்த 1923-ஆம் ஆண்டு 215 எண் கல்வெட்டில் கூத்தாடு தேவருக்கு விளக்குத் திருப்பணி கூறப்படுகிறது. 216 எண் கல்வெட்டில் முதல் ராஜராஜசோழன் மெய்க்கீர்த்தியும் 217 எண் கல்வெட்டில் பூம்பாவை பற்றிய செய்தியும் காணப் படுகின்றன. பழைய கல்வெட்டுப் பகுதிகள் அம்மன் கோயில் சுவர்களில் நிலை மாறி இருக்கின்றன எனவும், வேறு சில கற்களும் தவறி வந்து விட்டன எனவும் ஆராய்ச்சியால் நாம் தெரிகிறோம்.[1]

இப்போதுள்ள கோயில், பழைய கோயில் இருந்ததாகச் சொல்லப்படும் இடத்திலே அமைக்கப்பட்ட தென்றும், கடல் கிழக்கு நோக்கிச்சென்று

---

[1] M. பாலசுப்பிரமணிய முதலியார்,
C. M. இராமசந்திரன் செட்டியார்,
ஆகியோர் எழுதிய குறிப்புக்கள்.

கொண்டிருப்பதாகவும் ஒரு கொள்கை உள்ளது.[1] "மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்" என அப்பரும் "மாடமா மயிலை" எனத் திருமங்கையாழ் வாரும் கூறியதை அவர்கள் காலத்தில் திருக்கோவிலைச் சுற்றியும் இப்போது போன்றே அப்போதும் மாடவீதிகள் இருந்ததற்கு ஆதாரமாக சில அறிஞர்கள் கொள்கிறார்கள்.

2. புராதன வரலாறு

புராதன வரலாறு சரித்திரத்திற்குள்ள சான்று போன்ற ஆதாரத்தில் அமையவில்லை. எனினும் ஆன்றோர்கள் பற்பல காரணங்களைக் காட்டி இத்தகைய வரலாற்றைப் பற்றி நமக்குத் தெரிவிக்கிறார்கள். இக்காலத்தை மூன்று காலங்களாகப் பிரிக்கின்றார்கள். அவையாவன— (1) வேத காலம் (2) உபநிடத காலம் (3) சூத்திர காலம். வேத காலம் உபநிடத காலம் ஆகிய இவ்விரண்டு காலங்களும் மிகப்பழமையானவை. சூத்திர காலம் என்பது, சாங்கிய சூத்திரம் நியாய சூத்திரம் முதலிய சூத்திரங்கள் தோன்றிய காலமாகும். இக்காலம் கி.மு. 1400-ஆம் ஆண்டு முதல் கி.பி. 400-ஆம் ஆண்டு வரையில் என்பதாக அறிஞர்கள் வரையறுக்கின்றனர். இந்தக் காலத்தைச்சேர்ந்தது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் காலம்.

முதலாவதாக, உமை அம்மையார் மயிலுருவில் பூசை செய்தது கூறப்படுகிறது. ஒரு காலத்தில் சிவபெருமான் உமையம்மையாருடன் திருக்கயிலாயத்தின் வீற்றிருந்தார். அது சமயம் அம்மையார் வேண்டுகோளுக்கிணங்கப் பஞசாட்சரத்தின் பெரு

---

[1] மாவட்டக் கோவில் வரலாறு

மையையும் திருநீற்றின் மகிமையையும் பற்றிப் பெருமான் விளக்கம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு மயில் தன் தோகை விரித்தாடியது. அதன் அழகை உற்று நோக்கிய அம்மையார் அதன் ஆட்டத்தில் தமது கவனத்தைச் செலுத்தினர். இதைக் கண்ணுற்ற சிவபெருமான் "நீ பூதலத்தில் மயில் உரு பெற்றிடுவாய்" என்பதாக ஆணை பிறப்பித்தார். இந்நிலைக்கு வருந்திய தேவியார்" இதைத் தவிர்ப்பதெங்ஙனம்" எனக்குறையிரப்ப, இறைவன் "புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய்" என்பதாகக் கூறினர். இவ்வாறே அம்மையர் தொண்டை நாட்டில் இப்போது மயிலாப்பூராக அமைந்துள்ள பகுதியில் புன்னைமரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றைத்தாபித்துப்பூசித்து வந்தார். உமாதேவியாரதுபூசையை ஏற்றுக்கொண்ட பெருமான் தேவியின் முன் தோன்றி "மயிலாய் இருந்த பழி உன்னை விட்டகன்றது. கற்பகவல்லி யென்பதான பெயர் உனக்காகுக" என்பதான வரமும் ஈந்தனர். உமாதேவியாரும் பரமனை நோக்கி "அடியேன் இங்குத் தவம் செய்து உய்ந்தேன். இப்பெரும்பதிக்கு **மயிலை** என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இங்கிருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கெல்லாம் தாங்கள் அருள் புரிய வேண்டும்" என வேண்டிக் கொண்டார்,

இதையே தலபுராணம்

" கன்னியும் நின்று நின்றன் கழல்தனக் கன்புவேண்டும்
மன்னிய மயிலாப்பூசை வகுத்தலால் மயிலையென்ற
துன்னுமித் தலத்தை மேலோர் சொற்றிட வேண்டுமென
முன்னினேரெல்லாம் ஏத்தும் முத்தியை அடைதல்
வேண்டும்"

என்பதாகக் கூறுகிறது.

எம்பெருமானும் அவ்வாறே திருவருள் புரிந்து, தாம் **கபாலி** என வழங்கப்படுமாறு அருள் மயமான இலிங்கமானர். இது முதல் இப்பகுதி மயிலை என்னப் பெறுவதாயிற்று.

முருகப்பெருமான் திருமயிலையில் வழிபாடு செய்தது இரண்டாவதாகக் கூறப்படுகிறது.

மாயை என்பாளிடம் காசிப முனிவரருளால் பிறந்த சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூவரும் அரிய தவங்களியற்றித் தேவர்களை வருத்தினர். அவ்வருத்தம் பொருத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து சிவகுமாரராகத் தோன்றிய முருகப் பெருமான் சூரபத்மன் முதலியோரை வெல்லுவதற்குப் புறப்படு முன்னர் திருமயிலையில் எழுந்தருளிய கபாலீச்சரப் பெருமானுக்கு வழிபாடு செய்தார். அப்பெருமான் அப்போது முருகப் பெருமானுக்கு மங்கள ஆசி கூறிப் பெருமைமிக்க பாசுபதாஸ்திரம் அளித்தார். இத்தகைய காட்சியைக் கண்ணுற்ற கற்பகவல்லியம்மையார் சத்தி வேலைத் தம் புதல்வர் கையில் ஈந்து "நீ நற்பயன் அடைவாய்" என வாழ்த்தியதோடன்றி முருகப் பெருமான் வேண்டிய வரங்களையெல்லாம் மனமுவந்து அளித்தனர். அம்மையார் வேல் கொடுத்தது, "அழியாப் பேரளி உமைக் கணின்று பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த அமையாவென்றி அரத்த நெடுவேல்" என்பதாகக் கல்லாடமும் கூறுகிறது. உமையம்மை தந்த வேல் சிங்காரவேல். இவ்வாயுதங்களைப் பெற்ற முருகப் பெருமான் சிங்கார வேலர் என்னும் பெயரால் துதிக்கப்படுவாராயினர். சூரபதுமன் முதலியோரை வென்றபின், வள்ளி

தெய்வயானையாருடன் திருமயிலையில் வீற்றிருந்தார். இதனை,

" இமய மகள் குமர எமதீசா
இயலினியல் மயிலைநக ரினிதுறையும்
யெமது பரகுரவ பெருமாளே " என்பதாகவும்

" மதுர வாசகமிஞ்சிய கிஞ்சுக
இதழி மாதுமை மைந்தவி ரும்பொழில்
மயிலை மாநகர் வந்துறை இந்திரர் பெருமாளே "

என்பதாகவும் அருணகிரிநாதரும் குறிப்பிடுகிறார்.

அம்மையார் பஞ்சாட்சரத்தின் பெருமையை நன்குணர்ந்தவர். மயில் வடிவில் இருந்து பூசை செய்து சிவபெருமான் அருள்பெற்றபின் அம்மையார் தந்த வேல் பஞ்சாட்சரத்திற்குரிய பெருமையெல்லாம் பெறுகிறது. இது சிவமஞ்செழுத்து என்பதான பெயரையும் பெறுகிறது.

இத்தகைய பேராற்றலுடன் விளங்கும் சிங்கார வேலர். 'உமையெனும் மயில்பெற்ற மயில் வாகனன்' என்பதாகத் திருப்புகழில் துதிக்கப் பெறுகிறார்.

திருமயிலைக்கு ஆதாரமாக உள்ளது கபாலீச்சரம். கபாலீச்சரத்தை விடுத்துக் கருத முடியாத வகையில் உள்ளது திருமயிலை. கபாலீச்சரம் என்பது சிவபெருமானைக் கபாலி வடிவில் பிரம தேவன் பூசித்த தலம். கபாலம் என்பது மண்டை ஓடு. இந்த ஓடு பிரம தேவனுடையது.

படைப்புத் தொழில் அதிகாரம் அளிக்கப் பெற்றுள்ள பிரம தேவர் தாமே பரம காரணர் என்பதான ஆணவம் கொண்டான். படைப்புத் தொழில் புரியும் பிரம தேவரே ஆணவத்தில் அழுந்துவாரெனில் அவனால் தோற்றுவிக்கப்படும்

உயிர்களின் நிலை என்னும் எனக் கருதிய இறைவன் பிரம தேவரது ஒரு தலையைப் பிய்த்தெடுத்தனர். உலக வழக்கிலும், "மண்டைக் கர்வம்" "மண்டைக் கனம்" என்பதாகக் கூறுவதுண்டு. தவிரவும், ஒருவன் தலை தடுமாறி வாழ்க்கையை நடத்துவான் என்றால் பெரியோர்கள் அவனைப் பார்த்து ஆணவத்தில் அழிகின்றானே என்பதாக வருத்தமுறுவார்கள். இது போன்ற நிலையில் இறைவன் இருந்தனர். ஆணவத்தில் மூழ்கியிருந்த பிரம தேவன்பால் இரக்கங் கொண்டு ஆணவத்திற் கறிகுறியாக இருந்த அவன் தலையிலொன்றைப்பிய்த்தெடுத்துப் பின் அதில் பிச்சை ஏற்றது அறச்செயல் என்பதாகத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"பிச்சைய தேற்றான் பிரமன் தலைதனில்
பிச்சைய தேற்றான் பிரியா அறஞ்செய்யப்
பிச்சைய தேற்றான் பிரமன் சிரம்காட்டிப்
பிச்சைய தேற்றான் பிரமன் பரமாகவே."

மற்றெல்லாருக்குமே அறிவுறுத்தும் வகையில் பிரமன் சிரம் காட்டிச் சிவபெருமான் பிச்சையேற்றார் என்பது கருத்திற் கொள்ள வேண்டும். பிரமதேவர் சிவபெருமானைப் பூசித்து தன் இறுமாப்பு நீங்கிப் படைக்கும் ஆற்றலைப் பெற்றான். பிரம தேவரால் பூசிக்கப் பெற்றவர் கபாலீச்சரத்துப் பெருமான். "விரிஞ்சன் (பிரம தேவன்) முதல் எவ்வுயிருக்கும் காவலனார்" என்பதைச் சேக்கிழார் குறிப்பாக எடுத்துக் காட்டுவது கவனிக்கத்தக்கது. இது அறிவுறுத்தல் மட்டுமென்று எச்சரிக்கையாகவும் கொள்ளவேண்டும்.

"தலையே நீ வணங்காய் தலைமாலைக் தலைகணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்" என அப்பர் வலியுறுத்துவர்.

சிவபெருமான் தாருகவனத்தில் பிச்சையேற்ருர் என்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ்வனத்தில் வசித்த முனிவர்கள் சிவ வழிபாட்டிற்குப் புறம்பாகவுள்ள மீமாஞ்சத்தில் ஈடுபட்டு கர்மம் ஒன்றே தங்களைக் கடைத் தேற்றும் எனக் "கர்ம காண்டிகள்" ஆயினர். அவர்கள்பால் பேரிரக்கங் கொண்ட சிவபெருமான் வேதவடிவினதான கௌபீனத்தையும் சிவஞானமாகிய பூணூலையும் தரித்துக் கொண்டு, முச்சத்தி வடிவினதும் மும்மலங்களையும் அழிக்க வல்லதுமான சூலத்தையும் பராசத்தி வடிவினதும் பிச்சையேற்பதற்கு உந்தமமான பிச்சைப் பாத்திரத்தையும் நாதரூபமான உடுக்கையையும் மறைத்தல் சத்தி மயமான பாதுகையையும் கைக் கொண்டு சென்றனர். அவரது பேரழகில் முனிவர் பத்தினிகள் மயக்குண்டார்கள். முனிவர்கள்கோபம் பூண்டு அபிசார வேள்வி நடத்தினர். அவ்வேள்வியில் தோன்றிய புலியைக் கொன்று அதன் தோலை உடுத்திக் கொண்டார் சிவபெருமான்; மானையும் மழுவையும் கரத்தில் கொண்டார்; பாம்புகளை அணிகளாகக் கொண்டார்; அக்கினியைக் கையிலேந்தினர். முனிவர்கள் சோர்வுற்றனர். சிவபெருமான் அவர்களை மும்மலங்களினின்றும் விடுவித்துப் பக்குவராக்கினர். இவ்வுண்மையை மணிவாசகனர்,

" அம்பலத்தே கூத்தாடி அமுது செய்யப் பலிதிரியும்
நம்பனையுந் தேவ னென்று நண்ணுமது வென்னேடி
நம்பனையு மாமா கேள் நான்மறை கடாமறியா
வெம்பெரு மானீசா வென்றேத்தின காண் சாழலோ"

இதே நிலையில் சிவபெருமான் நம்மிடமிருந்து நமக்கே உரிய ஆணவ முதலிய அழுக்கை ஏற்றுக் கொள்கிருர். கோயில்களில் இருக்கும் பலி பீடங்கள் நம் அழுக்குகளைப் பலியாக (பிச்சை

யாக)ப் பெற்றுக் கொள்வதற்குத் காத்துக் கொண் டிருக்கின்றன. சுந்தரரும் இக்கருத்தை

"சொல்லை நம்பி பொருளாய் நின்ற நம்பி
தோற்றம் ஈறுமுதல் ஆகிய நம்பி
வல்லை நம்பி அடியார்க்கருள் செய்ய
வருந்தி நம்பி உனக் காட் செய்கில்லார்,
அல்லல் நம்பிபடுகின்ற தென நாடி
அணங்கொரு பாகம் வைத்தெண் கணம் போற்ற
இல்லம் நம்பி யிடுபிச்சை கொள் நம்பி
ஏழ்பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே"

"நம் உள்ளங்களாகிய இல்லங்களில் இடும் பிச்சையை நம்பி இருக்கும் எங்கள் பெருமான் ஏழ்பிறப்பிற்கும் எங்கள் தலைவர்" என்பதான கருத்தைக் கொண்டுள்ளது இப்பாடல்.

சிவ பெருமான் சத்தியால் இயக்கப் படு வதையும் குறிப்பிடுகிறது அவர் பிச்சையேற்பது. சிவத்தினிட மிருந்து தோன்றிய சத்தியே சிவத்தை இயக்குகிறது,

"சிவம் சத்திதனை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந் திருவரும் புணர்ந்து உலகுயிரெலா மீன்றும்
பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்தன்மைதான் தெரியு மன்றே"

என்னும் சிவஞான சித்தியார் இதே கருத் தில் உள்ளது. பல் கோடி உயிர்களுக்கும் உணவளிப்பவர் சிவபெருமான். ஆனால் அப் பெருமான் அவ்வுணவைத் தம்சத்தியிடம் பிச்சை யாக ஏற்கிறார். அடியவர்கள் பசித்திருக்கச் சிவ பெருமான் சகிக்க மாட்டார். சத்தியிடம் உணவு

இரந்து அடியவர்களுக்கு அளிப்பார். அத்தகைய சத்தி அன்ன பூரணித் தாயாகிறார். இக் கருத்தை வலியுறுத்துகிறது ஒருபாடல்

சீகாழி நகரினிற் சம்பந்த ருக்குநீ திருமுலைப் பால் கொடுத்தாய்
திகழுமைஞ் ஞிலியினில் அன்னஞ் சமைத்தருள் திருநாவுக்கரசுண
நீகாவலன் சிவன் கையிற்கொடுத்தாய் நிறை குருகாவூரினில்
நேசமுட னேசமைத் தேயிடுங் கட்டமுதை நின்மலன் கைக்கொடுத்தே
நோகாமலேபசி யிலாரூர ரடியரோடு நுகரவருள் செய்து நின்றாய்
நோயினன் முன்னிலையினுலுனது காசியினெந் தவடியேற்களிக்க
ஆகா தெனத்திரு வுளத்திலடை யாமலே யன்னம் படைத்தருள் வாய்:
அண்டகோ டிகள்பணி யகண்டபூரணி யென்னும் அன்னபூரணியன்னையே

தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்—

இத்தகைய காருண்ய மூர்த்தியை வெறும் பிச்சை ஏற்கிறார் எனக்கருதுதல் கூடாது என்பதைச் சைவ எல்லப்ப நாவலர் சிலேடையில் (இருபொருளில்) கூறுகிறார்.

"ஆராயுங் காலெடுப்பதைய மன்றோ வம்மானை
அன்ன மறியாரெடுப்பதைய மோ வம்மானை"
ஐயம் என்பது பிச்சை யென்னும் பொருளும் சந்தேகம் என்னும் பொருளும் கொண்டது. அன்னம் என்பது பிச்சைக் குரிய அன்னம் (சோறு) மற்றொரு பொருள் - சிவபெருமான் திருமுடி தேடித் தோல்வியுற்ற பிரம தேவராகிய அன்னம்

3. திருவள்ளுவர் வாழ்ந்த திருமயிலை.

தெய்வச் சூழ்நிலையில் வளர்ச்சி பெற்ற திருமயிலை அன்புமயமாகியதையும் நாம் உணர முடியும். திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்பர். இதனை

"தொண்டை மண்டிலத்தில் வண்டமிழ் மயிலையில்
வேளாண்மை கொளும் வேளாண் மரபுயர்
துள்ளு வரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்"

என்னும் கபிலரகவல் தெரிவிக்கிறது.

இவர் செய்த உபதேசத்தின் மகிமை பலவாறுகப் பாராட்டப் பெறுகிறது. "திரு மயிலாப்பூர் என்கிற திவ்யதலம் தேவரமிழ்தம் பிறந்த திருப்பாற் கடலெனப் பொலிவுற்றது. அவ்வமிழ்தத்தை உண்ணுதற்கு மொய்த்த தேவரினங்களைப் போன்றனர் பலநாடுகளிலிருந்து அறவுபதேசங் கேட்க வந்தார்; அவ்வமிழ்தம் பருக வொட்டாதெழுந்த நஞ்சம் போன்றது அங்குத் தொக்க மாந்தர் தம் அறியாமை, அந் நஞ்சத்தினைத்தான் விழுங்கித் தேவர்க்கு அமிழ்தம் பகுத்தருளிய இறைவன் போன்றனர், அவ்வறியாமையை நீக்கித் திருக்குறளுபதேசஞ் செய்தருளிய ஆசிரியர் திருவள்ளுவனர். இங்ஙனம் ஆசிரியர் தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனர் உலகனைத்தையும் நல்லற வொழுக்கத்திற் படுத்துத் தம்முடைய திருமேனியினை முதல்வன் அருள் வெள்ளத் தழுத்தி அதனை அவ்வண்ணமாக்கித் தாம் இறைவன் திருவடியோடு ஒன்றி இரண்டறக் கலந்திட்டார்"! இத்தகைய பெருமையுடன் விளங்கிய திருமயிலை மேலும் பொலிவுற்றது.

தேவார ஆசிரியர்கள் கண்ட திருமயிலை.

திருஞானசம்பந்தர் :

திருஞான சம்பந்தர் கண்ட மயிலை அவர் பாடியருளிய பூம்பாவைப் பாட்டினுல் நாம் அறிகிருேம். சிவபெருமானை வழிபடும் முறையில் கொண்டாடப் பெறும் திருவிழாக்களைக் காணுதலின் பயனும் அடியார்க்கு அமுது செய்வித்தலின் மகிமையும் நாம் அறிகிருேம். இப்பாடல்களிலிருந்து அக்காலத்திய திருவிழாக்கள் பலவற்றையும் நாம் அறிந்து கொள்கிருேம். இவ்விழாக்களில் கலிவிழா என்னும் விழா சிறப்பாகக் காணப்படுகிறது. பல இசைகளுடன் எட்டுத் திக்குகளிலும் பூசை செய்து கொண்டாடப்படும் விழாவாகவுள்ளது. தற்போது நடைபெறும் கலியுகத்தில், உண்மை நிலை ஒன்றிருக்க, உண்மையில்லாத ஒரு நிலை மேலோங்கி நிற்கும் என்பதை ஆன்ருேர்கள் எடுத்துக் கூறியுள்ளார். சீலம் புறத்தில் காணப்படுமென்பதாகவும் அதே சமயத்தில் அக்கிரமம் அகத்தில் தோன்றும் என்பதாகவும் கயிலாச நாதர் சதகம் குறிப்பிடுகிறது. இத்தகைய கலியின் கொடுமை நீங்க வேண்டுமானுல் இறைவன் திருவருள் மேன்மை மேலோங்க வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பொக்கொளியூரில் முதலை வாயிலிருந்து பிராமணச் சிறுவனை மீட்டுக் கொடுத்தது கலியின் பொய்மையைப் போக்கிற்று. இது போன்றே திருஞான சம்பந்தர் என்பு பெண்ணுருவாக்கியது கலியின் கொடுமையைப் போக்கியது என உணரத் தக்கது. இத்தகைய விழாக்கள் இன்றும் நடைபெறுதலில் இதன் உண்மை விளங்கும்.

திருஞான சம்பந்தர் பாடியருளிய பாடல்களின் முதல் பாட்டு,

"மட்டிட்ட புன்னையங் கானல்மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சர மமர்ந்தான்"

என்பதாகத் தொடங்குகிறது. இந்த ஈரடியிலே திருஞான சம்பந்தர் திருமயிலையின் வரலாற்றைக் குறிப்பதுடன் பூம்பாவை உயிர் பெற்றுத் தோன்றுமாறு வேண்டிக் கொள்கிறார். மடமயிலை என்னும் தொடர் மயில் உருவில் வழிபட்ட உமையம்மையாரைக் குறிக்கிறது. மடமயில் என்பது கவனக் குறைவாக அம்மை இருந்ததால் இவ்வடி வெய்தினர் நம் அம்மை என்பதாகவும் கொள்ளலாம். மயில் வடிவில் பூசித்த தேவியைக் "கொண்டான்" (கொண்டவர்). அயன் பூசித்தலால் கபாலீச்சரம் அமர்ந்தார் இங்கு மயிலையும் கபாலீச்சரமும் இணைக்கப் பெறுகின்றன. கட்டு என்பது பிணைப்பு என்பதான பொருளையும் குறிக்கும். இங்கே மடமயிலை எனத் தொடக்கத்தில் குறிப்பிட்டதால் சத்தியை நினைவுபடுத்திக் கொள்கிறார் எனக் கொள்ள வேண்டும்.

சத்தி திருவருளால் இவ்வற்புதம் நிகழ்ந்தது என்பது இப்பாடல்களுக்குப் பூம்பாவைப் பாட்டு என திருஞான சம்பந்தரே சூடியதால் தெரியவரும் என ஆன்றோர்கள் கருதுகிறார்கள். சேக்கிழாரும் "தேவர் தேவனைத் திருக்கபாலீச்சரத்து அமுதை பாவை பாகனைப் பண்பினால் பரவி" எனக்குறிப்பிட்டுக் காட்டுவது இதற்கு ஆதாரமாகும்.

இவ்வற்புதம் நிகழ்ந்ததைப் பற்றிக் குறிப்பிடும் போது சேக்கிழார்,

"எண்ணில் ஆண்டு எய்தும் வேதாப்
படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணும் நான்முகத்திற் கண்டான்
அவளினும் நல்லாள் தன்பால்

புண்ணியப் பதினாறு ஆண்டு
    பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
    ஆயிர முகத்தாற் கண்டார்''

என்னும் பாடலைக் கையாளுகிறார் இதில் பல அரிய கருத்துக்கள் பொதிந்துள்ளன.

பிரமதேவனுக்கோ பல ஆண்டுகள் ஆயின. எனினும் பூம்பாவையின் வெளித் தோற்றத்தின் வண்ணத்தைக் கண்டான். ஆனால் திருஞான சம்பந்தரோ பதினாறு வயதினர். அப் பதினாறு ஆண்டும் புண்ணிய ஆண்டுகள். அத்தகையவர். பூம்பாவையின் தோற்றத்தில் சிவபெருமானின் கருணையாகிய வெள்ளத்தை ஆயிரம் முகங்களில் கண்டார். அவருக்கு ஆயிரம் முகங்கள் இருந்தன என்பதன்று. முகங்கள் என்பது வகைகள். ஆயிரம் என்பது பெருந்தொகையின தான ஒரு எண்ணிக்கை. பற்பல வகையில் பார்க்கப் பார்க்கச் சிவபெருமானின் கருணையே காட்சியளிக்கிறது. பிரமதேவன் படைப்பினால் பூம்பாவை பிறந்தபோது ஒரு சிலர் மகிழ்ச்சி யெய்தும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருஞான சம்பந்தர் பாடல்கள் நிறைவு பெற்றவுடன் மண்ணோர் விண்ணோர்களனைவரும் கண்குளிரக் காணும் வகையில் தோன்றினாள் பூம்பாவை. பிரமதேவன் படைத்த பூம்பாவை மறைந்த விடத்து, எலும்பும், சாம்பலும் மட்குடத்தில் மட்டும் பூசிக்கப் பெற்றன. திருஞான சம்பந்தர் தோற்றுவித்த பூம்பாவை சிவத்தை மேவி இன்றும் என்றும் பூசிக்கப்படும் வகையில் கபாலீச்சரத்தின் முதற்படியில் அமர்ந் திருப்பது திருமயிலைக்குத் தனிப்பெருமை அளிக்கிறது.

திருஞான சம்பந்தர் தாம் பாடிய பாடல்களில் திருமயிலையை, மடமயிலை, மாமயிலை, உயர்மயிலை எனவும், திருமயிலையில் வாழ்வோர்களை, கற்றூர் எனவும், பெண் இனத்தவர்களை மடநல்லார், தையலார், நேரிழையார் எனவும், இளைஞர்களை கூர்தருவேல் வல்லார் எனவும் சிறப்பித்துக் கூறி யுள்ளார். இவர்தம் வாக்கு திருமயிலையின் சிறப்பை உயர்த்துவதாக நாம் கொள்ள வேண்டும்.

திருநாவுக்கரசர் பாடிய தனிப்பதிகம் கிடைக் கப் பெற்றோம் இல்லை. ஆயினும் அவர் திருமயிலை யிலுள்ள கபாலீச்சரத்தில் வழிபாடு செய்தார் என்பதை நாம் காணமுடியும். திருவொற்றியூர் திருத்தாண்டகத்துப் பாடலில் "வடிவுடைய மங்கை யும் தாமும் எல்லாம் வருவாரை எதிர்கண்டோம் மயிலாப்புள்ளே" என்பதாகவும், 'மயிலாப்பில் மன்னினூர் மன்னி ஏத்த' என்பதாகவும் "மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பிலுள்ளார்" என்ப தாகவும் குறிப்பிட்டுள்ளார், மயிலாப்பு என்பது மயிலாப்பூர் ஆகும். மேலும் கபாலீச்சரத்துக் குரிய தாகவுள்ள பாடல் பல அடியார்கள் நன்குணர்ந்ததே யாகும்.

"பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானுன் தன்னைச்
சுடருருவில் என்பருக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் னடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னனைக்
கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணூரக் கண்டேன் நானே."

கடலின் விளிம்பில் காலை நேரத்தில் பிராண வாயுவுடன் வெளிவரும் (Ozone)என ஆங்கிலத்தில்

சொல்லப்படும்) கடற்காற்றைச் சுவாசிக்க பல அன்பர்கள் செல்கிறார்கள். இவர்கள் உடல் நலத்திற்காகச் செல்கிறார்கள். நம் நாயனாரோ நம் ஆன்ம நலத்திற்காகச் சென்றார். இத்தகைய நாயனார் பாடிய பாடல்கள் சில வற்றையேனும் பாடிச் சென்றால் உடல் நலத்தோடு ஆன்ம நலத்தையும் பெற இயலும், என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். மற்றுமொரு சிறப்பு வியக்கத்தக்க வகையில் காணலாம்.

புக்க திருத்தாண்டகம் பதினொரு பாடல்களை யுடையது. முதல் பாடல் "மங்குல் மதிதவழு மாடவீதி மயிலாப்பிலுள்ளார்" எனத் தொடங்கி, பதினொன்றும் பாடல் "சென்று காணீர் கறை சேர் மிடற்றெங் கபாலியார்க்கே" என நிறைவு பெறுகிறது. இப்பதிக்கத்தின் இடை நடுவில் பல தலங்கள் குறிக்கப்படுகின்றன.

அம்முதல் பாடல்.

"மங்குன் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார் போய்க் கொள்ளம் பூதூர்
தங்கு மிடமறியார் சால நாளார்
தருமபுரத் துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே."

என்பதாகும்.

இம்முதல் பாடலிலே தலைநகரமாம் சென்னையம் பதிக்குரிய மயிலைப்பதி முதலிலே தெரிவிக்கப் பட்டு மற்றப் பல பகுதிகளிலுள்ள தலங்களெல்

லாம் வரிசை முறையில் குறிக்கப் படுகின்றன. எவ்வகையிலோ தலைநகரிலுள்ள மயிலைப் பதிக்குத் தனிச்சிறப்பு வியக்கத் தக்க வகையில் வந்தெய்தி யுள்ளது.

6. அடியார்கள் பலர் போற்றிய திருமயிலை

வாயிலார் நாயனர் இத்தலத்தில் அவதரித்துப் பேறு பெற்றுர். இவ்வரலாறு திருத்தொண்டத் தொகையிலும் பெரிய புராணத்திலும் இடம் பெற்றுள்ளது. "துறைக் கொண்ட செம்பவளம் இருள்அகற்றும் சோதித் தொல்மயிலை" என்பதாகத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் நமக்கு எடுத்துக் காட்டுகிருர். தொன்மை யுடையதும் ஒளி மிக்கதுமாகவுள்ளது திருமயிலை என்பதை திருமயிலையைக் கண்ணுற்றவர்கள் ஒப்புக் கொள்வர்.

தேவார காலத்திற்குப் பிற்பட்டவர் திருவிசைப் பாப்பதிகம் இயற்றிய திருவாலியமுதனர். இவரைத் தவிர எண்மர் இயற்றிய பாடல்களும் திருவிசைப் பாவில் இடம் பெற்றுள்ளன. இறைவனது திரு மேனிப் பகுதிகளாகிய திருவடி முதல் சென்னி வரையிலுமுள்ளவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளார் இவர். ஆதலால் இந்தப் பதிகம் பாதாதிகேசம் எனப் பெயர் பெற்றுள்ளது. "தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்" எனத் தில்லையைக் குறிப்பிடுவதால் இவர் தமிழ்ச் சுவையுடனும் இசை அறிவுடனும் விளங்கினர் என்பது தெரிய வருகிறது. சீகாழிக்கு அடுத்துள்ள திருவாலி என்பது இவர் ஊர் எனக் கொள்கின்றனர் சிலர். ஆனல் இவர் தாம்பாடிய,

"இறைவனை யேத்து கின்ற
விளையாண் மொழியின் றமிழான்
மறைவல நாவலர் கண்
மகிழ்ந் தேத்துசிற் றம்பலத்தை

அறைசெந் நெல்வான் கரும்பி
　　னணி யாலேகள் சூழ்மயிலே
மறைவல வாலி சொல்லே
　　மகிழ்ந் தேத்து வானெளிதே."

என்னும் நான்காம் பதிகப்பாடலிலே, தம்மை "அணி ஆலேகள் சூழ்மயிலே மறைவல வாலி" எனச் சொல்லிக் கொள்வதால் இவருக்கு ஆலி என்பதான பெயர் இருந்ததென்றும் இவர் திருமயிலேயில் வாழ்ந்தாரெனவும்ஆராய்ச்சியாளர்கருதுகிருர்கள்.[1] செந்நெல் பயிரும் கரும்பும் விளேந்த திருமயிலேச் சுற்றிலும் ஆலேகள் இருந்தன என்பது இப்பாடலால் தெரியவருகிறது.

காஞ்சிபுரத்தில் அரசாண்ட மன்னவர்களில் ஒருவர் ஐயடிகள் காடவர்கோன். இவரது காலம் கி.பி. ஆரும் நூற்ருண்டு. இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்கிருர். ஐ என்பது இறைவனேக் குறிக்கும். இறைவனுடைய திருவடிகளுக்கு வணக்கஞ் செலுத்துபவராக காடவர்கோன் இருந்தார் என்பதாக இவரது பெயர் தெரிவிக்கிறது. இவர் பல சிவத்தலங்களுக்கும் சென்று வழிபாடு நடத்தினர். ஆங்காங்கு இவர் பாடிய பாடல்கள் க்ஷேத்திர வெண்பா என்னும் தலேப்பில் 11-ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. திருமயிலேயை வழிபட வேண்டும் என்னும் கருத்தில் தம் நெஞ்சிற்கு அவர் அறிவுறுத்துகிருர். "ஓ நெஞ்சமே குயிலேப் போன்று கறுத்த உரோமங்கள் எல்லாம் கொக்கைப் போன்று வெண்ணிற மெய்திவிடும். அத்தகைய காலத்தில் முதுமைப் பருவம் வந்தெய்தும். அப்போது இருமலும் வந்து சேரும். இத்தகைய நிலேகளெல்லாம் தோன்று

---

[1] கா. சுப்பிரமணியப் பிள்ளே இலக்கிய வரலாறு.

முன்னே நீ மயிலாப்பூரில் அழகிய கடற்கரையில் புன்னைமலர்ச் சோலையில் உள்ள ஸ்ரீ கபாலீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சிந்தி. இவ்வாறு செய்யாவிடில் பின்னர் அங்காந்து அதாவது வாய் திறந்து வருத்தமுற்று, இளைத்து, இளைத்துத் துன் புறுவாய்" இக்கருத்தைக்கொண்ட,

"குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப்பு காமுன்னம் நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந்து இளைத்து"

என்பதான பாடல் நம் கருத்தில் இருக்குமானல் கபாலீச்சரப்பெருமானை வழிபடாமல் இருக்க மனம் இடம் தருமா?

திருமயிலையைப் பல இடங்களில் பாராட்டிக் குறிப்பிட்டுக் காட்டுகிருர் சேக்கிழார்.

வாயிலார் நாயனர் புராணத்தில்,

"நன்னட்டிடை மல்லல்நீடிய வாய்மை
வளம்பதிபல் பெருகுங்குடி நீடுபரம்பரைச்
செல்வமல்கு திருமயிலா புரி"

"வீதி எங்கும் விழா அணி காளையர்
தூதியஞ் சுரும்பணித் தோகையர்
வீதி எங்கும் புனை மணிமாடங்கள்
மன்னு சீர் மயிலைத் திருமாநகர்"

இவ்வாறே திருஞானசம்பந்தர் புராணத்திலும் திருநாவுக்கரசுநாயனர் புராணத்திலும் மயிலையைப் பற்றி அழகுற வர்ணிக்கிருர்.

திருமயிலாபுரி மாடம் ஓங்கிய மாமயிலைமா நகர்; ஆழி சூழ் மயிலாபுரித் திருநகர்; பழுதில் புகழ்த் திருமயிலை; மலர்ச் சோலை மயிலாப்பூர்; சீர்த்திருமயிலை என்பதாக அவர் குறிப்பிடுவதில் தனிச் சிறப்புள்ளது. திருஞான சம்பந்தர் கபாலீச்சரம் என்பதாக தமது பூம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகிறார். திருக்கபாலீச்சரம் என்பதாகவும் கபாலி நாதரை திருக்கபாலீச் சரத்தமுது என்பதாக அவர் போற்றுவது அவர் இத்தலத்தின் மீது கொண்டுள்ள பெரு மதிப்பைத் தெரிவிக்கும். இதனை உணர்த்துகிறது இப்பாடல்;

வரைவளர் மாமயி லென்ன
　　மாட மிசை மஞ்சாடுந்
தரை வளர் சீர்த் திருமயிலைச்
　　சங்கரனார் தாள் வணங்கி
உரைவளர் மாலைகளணிவித்
　　துழவாரப் படையாளி
திரைவளர் வேலைக் கரை போய்த்
　　திருவொற்றியூர் சேர்ந்தார்.

மலைபோல் உயர்ந்திருக்கிறது மாடம்: மயில் போலிருக்கிறது மேகம்; மயில் ஆடுவது போலி ருக்கிறது மேகம் படிவது. உமாதேவியார் மயில் வடிவில் பூசை செய்த குறிப்பும் இதில் உள்ளது. முன்னர் மலையாக வளர்ந்துள்ள இமய மலையிலே தவஞ்செய்து சிவபெருமானை யடைந்த பார்வதி தேவியார் உலகிலே பெருகி வளரும் திருமயிலையில் தவம் செய்தார் என்பதும் இங்கு உணரத் தக்கது.

திருமயிலையைப் பற்றித் திருமங்கை ஆழ் வாரும் திருவல்லிக்கேணியைப் பற்றிக் கூறு மிடத்து "தேனமர் சோலை மாடமாமலைத்

திருவல்லிக்கேணி'' என்பதாகக் குறிப்பிடுகிருர். "ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து ஆழி தொட்ட கஜேந்திர வரதனே தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணியில் நிற்கின்ருன்'' எனக் கூறுகிருர். மேலும் பேயாழ்வாரும் அவதரித்தது திருமயிலையே.

7. திருமயிலையின் தனிப் பெருஞ்சிறப்பு

ஆங்கிலேயர் வசம் வந்த போது திருமயிலையை உள்ளிட்ட சென்னை சில பகுதிகளையே கொண்டிருந்தது. அப்போது திருவல்லிக்கேணியும் திருமயிலையுடன் இணைந்திருந்த தாகவே கருதப்பட்டது. மிகவிரிவடைந்துள்ள சென்னையம்பதி இப்போது City ஆகவுள்ளது. City என்பதற்கு இப்போது பெரிய நகரம் அல்லது மாநகர் எனக் கொள்கிருேம். தற்போதைய சென்னையம் பதியின் ஒரு பகுதியாகிய திருமயிலையைச் சேக்கிழார் தமது காலத்திலே (12-ஆம் நூற்ருண்டிலேயே) "மாநகர்'' எனக் குறிப்பிட்டுள்ளார். நாயன்மார்களாலும் ஆன்ருேர்களாலும் நல்லாசி வழங்கப் பெற்றுள்ள திருமயிலை என்றும் சிருடன் விளங்கும் என்பதற் கையமில்லை. திருமயிலைக் கபாலீச்சரத்தில் நடைபெறும் பூசைகளும் திருவிழாக்களும் மேலும் சிறப்புற விளக்கம் பெற்று வருவது கண்கூடு. இத்தகைய தெய்வச் சூழ்நிலை நம் நாட்டவரைமட்டு மின்றி, பன்னெடுந்தொலைவிலுள்ள பிறநாட்டவர்களையும் தன்வசப் படுத்தி ஆட்கொள்கிறது.

இத்துணை சிறப்புகளுக்கு மேறபட்ட தனிச் சிறப்பு கபாலீச்சரத்திற்கு மட்டுமே உண்டு. பல சிவாலயங்களில் அறுபத்து மூவர்கள் நிலைநாட்டப்

பெற்றுள்ளார்கள். பூசையும் நடைபெறுவதுண்டு. ஆனால் கபாலீச்சர ஆலயத்தில் நடைபெறுவது போல நாயன்மார்கள் எல்லாருக்கும் தலைவராக விளங்கக் கூடிய திருஞானசம்பந்தருடன் எல்லா நாயன்மார்களும் கபாலீச்சரத்துப் பங்குனிப் பெரு விழாவில் காட்சியளிப்பது எங்குமில்லை.

இவ்வறுபத்து மூவர்கள் எல்லாரும் ஒரு நாட்டவர் அல்லர்; ஒரு காலத்தியவர்கள் அல்லர்; பற்பல நூற்றாண்டுகளில் பற்பல இடங்களில் வாழ்ந்தவர்கள். தாழ்நிலை வகுப்பினர், மேல்நிலை வகுப்பினர் என இப்போது சொல்லப்படும் வகுப்பினர்களும் இத் திருகூட்டத்தில் உள்ளார்கள். இல்லறம் நடத்தியவர்கள் பலர்: துறவறம் பூண்டவர் சிலர். முதியோர் பலர்: இளையோர் சிலர்: மூவர் பெண் மணிகள். முடியரசர் அறுவர்: குறுநில மன்னர் ஐவர்: குருவருளால் முத்திபெற்றவர். பன்னிருவர் சிவனடியார் வழிபாட்டால் முத்திபெற்றவர் பத்தொன்பது பேர்: மற்ற முப்பத்திரண்டு பேர்கள் சிவலிங்க பூசை செய்து முத்திபெற்றவர். அறுபத்துமூவர்களில் ஏழுபேர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடியவர்கள்.

இவர்கள் எல்லாரும் சிவபெருமானிடத்து இடையறா அன்பு பூண்டொழுகினர். சைவ சமயத்தின் கோட்பாடுகளையும் சைவ சித்தாந்தத்தின் நுட்பங்களையும் ஒன்று சேர்த்து விளக்கம் காணத் தக்க வகையில் அவர்களுடைய வாழ்க்கையும் வழிபாடும் அமைந்துள்ளன. இத்தகைய நாயன்மார்கள் திருவுலாக் காட்சி அரனிடத்தும் அடியாரிடத்தும் மக்களை ஈடு படுத்தும் என்பது திண்ணம். இதுவே உலகப் பெருவிழாவாக

ஒருகாலத்தில் ஆகலாம் என நம்பிக்கை கொள் வோமாக.

" தத்து முதெயில் மூன்றும் தழலெழ
முத்து முரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தானிஃன சேர்அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்"

—காஞ்சிப்புராணம்

—o—

இரண்டாம் பாகம்

நாடகச் சுருக்கம்

சோழ நாட்டிலே, பிரமபுரம் முதலிய பன்னிரண்டு பெயர்களைக் கொண்டுள்ள சீகாழிப் பகுதியில், சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் மகனாராகத் தோன்றியவர் திருஞான சம்பந்தர். தமது மூன்ருவது வயதில், உமையம்மையாரது ஞானத் திருப்பால் உண்டு, இறைவன் இறைவி இவ்விருவராலும் ஆட் கொள்ளப் பெற்றவர். பலதலங்களுக்குச் சென்று ஆற்றல் மிக்க பலபாடல்களைப் பாடி இறை வழிபாடு செய்வது இவரது வழக்கம். காஞ்சி முதலிய தலங்களில் வழிபாடு செய்து பின்னர் திருவொற்றியூர் வந்து சேர்ந்தார்.

மயிலை, திருமயிலை, மயிலாபுரி என்றெல்லாம் மயிலாப்பூரைக் குறிப்பிடுவதுண்டு. இவ்வூரில் செல்வம் நிறைநத வணிகர் வசித்துவந்தார். இவர் தம்பெயர் சிவநேசர். தம்பெயருக் கொப்ப இவர் சிவபெருமானிடத்து அளவுகடந்த நேசம் கொண்டிருந்தார். இவர் திருஞான சம்பந்தரிடம் கொண்டிருந்த அன்பு காரணமாகத் தமது ஒரே மகளாகிய பூம்பாவையையும் தமது செல்வம் அனைத்தையும் திருஞான சம்பந்தருக்கே உரிமை யாக்கிய தாகப்

பலரறியத் தெரிவித்தனர். நாட்கள் பல கழிந்தன. ஒரு நாள் நந்தவனத்தில் மலர் பறித்திடும் போது பூம்பாவையை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அவள் இறந்தனள் "இவளை முன்பு திருஞான சம்பந்தருக்கு உரிமையாக்கி விட்டதால் இவளது உடலைத் தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் குடத்தில் இட்டு அவர் வரும் வரையில் காத்து வருவேன்" என்பதாகச் சிவநேசர் அவ்வாறே செய்தனர். திருஞான சம்பந்தர் என்று வருவார் என எதிர்பார்த்திருந்தார்.

திருவொற்றியூர் வந்து சேர்ந்தனர் திருஞான சம்பந்தர் என்பதைக் கேள்வியுற்ற சிவநேசர் மயிலாப்பூரிலிருந்து திருவொற்றியூர் வரையிலும் பந்தல் அமைத்து ஆங்காங்கு பலவாருக அலங்காரங்கள் செய்வித்தனர். பின்னர், பல அடியார்களோடும் திருஞான சம்பந்தரை எதிர்கொண்டழைத்து வணங்கிப் பேரானந்த முற்ருர். சிவநேசரைப் பற்றிய செய்திகளை யெல்லாம் தெரிந்து கொண்ட திருஞான சம்பந்தர், பூம்பாவையின் எலும்பையும் சாம்பலையும் கொண்டு வருமாறு கூறினர். திருக்கோயிலின் திருமதில் புறத்திலுள்ள திருக்குளக்கரையில் திருஞான சம்பந்தரது முன்னிலையில் எலும்பும் சாம்பலுமுள்ள குடம் வைக்கப்பட்டது. அக்குடத்தைத் திருஞான சம்பந்தர் திருஅருள் நோக்கம் செய்தனர். 'பூம்பாவாய்!' என அதனை நோக்கிக் கூப்பிட்டார். "இந்த உலகத்தில் பிறந்தவர்கள் பெறத்தக்க பெரும் பேறு சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தலும், சிவபெருமானை முன்னிட்டு எடுக்கப் பெறும் திருவிழாக்களைத் தரிசனம் செய்தலும் ஆம். இவ்விரண்டும் உண்மையாம் என்ருல், பூம்பாவாய், நீ உயிர் பெற்று எழுந்திருக்கக்

கடவாய்'' என்பதாக மட்டிட்ட புன்னையங்கானல்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். முதல் பாடல் பாடப் பெற்றவுடன், இறந்த பூம்பாவை தன் உருவம் பெற்றாள். பின்னர் எட்டுப் பாடல்கள் பாடப் பெற்றவுடன் பன்னிரண்டு வயதினளாகிய வளர்ச்சி பெற்றாள். பத்தாவது பாடல் பாடப் பெற்றவுடன் வளையல் அணிந்த கை குடத்திலிருந்து வெளிவந்தது. தாமரை மலரிலிருந்து திருமகள் காட்சியளிப்பது போன்று, குடம் உடைய, பூம்பாவை தோன்றினள். மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் பாராட்டினர்; துதித்தனர்: பூம்பாவையும் சிவநேசரும் திருஞான சம்பந்தரை வணங்கினார்கள். பூம்பாவையைத் திருஞானசம்பந்தர் மணம் புரிந்து கொள்ள வேண்டுமெனச் சிவநேசர் விரும்பினர்; பூம்பாவையைத் தாம் எழுப்பியதால் அவளுக்குத் தாம் தந்தை போன்றுள்ளதாகத் திருஞான சம்பந்தர் தெரிவித்து, சிவநேசர் விருப்பத்திற்கு இசைய மறுத்தனர். வருத்தமுற்ற சிவநேசருக்கு ஆறுதல் சொல்லி விட்டு விடைபெற்றுத் திருஞான சம்பந்தர் திருவான்மியூர் செல்கிறார்.

இறுதி அங்கம் திருஞான சம்பந்தர் பாடியருளிய பூம்பாவைப் பாட்டின் கருத்தையும் தெய்வீக நெறியின் தத்துவத்தையும் விளக்குகிறது.

பூம்பாவை நாடகம்

அங்கம் I : காட்சி 1

இடம் : *திருமயிலாபுரி கடற்கரையிலுள்ள சிவநேசர் மாளிகை*

நேரம் : *காலை வழிபாடு நடைபெறும் சமயம்.*

பாத்திரங்கள் : *சிவநேசர், ஓதுவார், சிவநேசரின் கணக்கர், சில அடியார்கள் சிவநேசரின் துணைவியார்.*

ஓதுவார் : [இராகம்-நாட்டை]

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்
[மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட் டெம்பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

[இராகம்-பூபாளம்]

மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி

பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்

பொங்கழல் உருவன் பூதநாயகனல்
வேதமும் பொருள்களும் அருளி

அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

சிவநேசர் :

யாவரும் திருவமுது செய்யலாம்
மாலையில் ஒன்று கூடுவோம்.

காட்சி 2

இடம்: சிவநேசர் மாளிகைக்கருகில் உள்ள சாலை

காலம்: பகல்

பாத்திரங்கள்: சீர்காழிப்பதி அடியார், மதுரையம் பதி அடியார், மயிலாபுரி அடியார்

சீர்காழிப்பதி அடியார்:

வணக்கம். திருமயிலை சிவநேசர் இல்லம் எங்குளதென அறிவிப்பீர்களா?

மயிலாபுரி அடியார்:

இதோ அண்மையில் தானுள்ளது. இவர்கள் (மதுரையம்பதி அடியாரைச் சுட்டிக்காட்டி) மதுரையிலிருந்து வந்தவர்கள். நாங்கள் காலையில் சிவநேசர் இல்லத்தில் நடைபெற்ற வழிபாட்டில் கலந்து கொண்டோம். இப்போது திருவமுது செய்யப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறோம். நீங்களும் வாருங்கள் திருவமுது செய்யலாம்.

சீர்காழிப்பதி அடியார்:

உங்கள் அழைப்பிற்கு நன்றி. உங்களுடனே வருகிறேன். சிவநேசரைப் பற்றி அதிகம் அறிந்திலேன். எனினும் அடியார்களை மிக அன்பாக அவர் உபசரிப்பர் என்பது கேள்வியுற்றேன்.

மயிலாபுரி அடியார்:

சிவநேசரைப் பற்றி உங்களுக்கு முற்றிலும் தெரியாதோ? இருநிதிப் பெருஞ்செல்வத்தின் எல்லையைக் கண்டவர். சிறந்த அடியார். அவர் தம்மையே யறிந்தபின்னர் சிவபெருமான்பால் அடிமை பூண்டவர். பொய்மை நீக்கி மெய்ப் பொருளையுணர்ந்த செம்மையே புரிமனத்தவர். இன்று மாலை அவருடன் நாமெல்லோரும் கலந்து பேசலாம் வாருங்கள்.

காட்சி 3

இடம் : சிவநேசர் மாளிகை

காலம் : மாலை

பாத்திரங்கள் : சிவநேசர், ஓதுவார், அடியார்கள்.

சிவநேசர் :

வணக்கம். பல ஊர்களிலிருந்து இங்குவந்துள்ள அடியார்கள் பலரையும் காண மகிழ்ச்சியடைகின்றேன். சீர்காழிப் பதியினின்றும் வந்துள்ள அடிகளாரே! சீர்காழி மன்னர் திருஞானசம்பந்தர் ஆற்றிவரும் அருஞ் செயல்கள் தங்களுக்குத் தெரிந்திருக்குமே! எனக்குச் சொல்வீராக.

சீர்காழி அடியார் ;

திருஞானசம்பந்தர் எங்கள் ஊரில் தோன்றியதில் நான் பெருமை கொள்கிறேன். அவர் பிறந்த ஊர் காரணமாக அவரைக்காழி மன்னன், புகலியர் கோன், வெங்குருவேந்தன், தோணி புரத்தோன்றல் என்றும், அவர் பிறந்த கோத்திரம் காரணமாக கவுணியர் கோன், கவுணியர் தம் குலதீபம் என்றும், ஞானப் பாலுண்டமையால் திருஞானசம்பந்தர் ஞானபோனகர் என்றும், அம்மையார் தந்த பால் உண்டமையால் ஆளுடைய பிள்ளையார், புரமெரித்தார் திருமகன், தெய்வஞானக்கன்று என்றும், பிற சமயங்களை வென்ற காரணமாகப் பரசமய கோளரி என்றும், தெய்வ மறையை நிலை நாட்டியதால் மாமறைச் சிறுவர், சைவ மைந்தர் என்றும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் வல்லுநர் ஆதலால் முத்தமிழ் விரகர் என்றும் அவர் அழைக்கப்பெறுகிறார்; பேசப் பெறுகிறார் ; துதிக்கப் பெறுகிறார். அன்னாரைப் பற்றி எங்குமே பேச்சு, அவர் தற்சமயம் பல தொண்டர்களுடன் தலயாத்திரை

செய்து கொண்டிருக்கிறார். மதுரையம்பதி அடியார் மற்றவற்றை எடுத்துச் சொல்ல இயலுமென நினைக்கின்றேன்.

சிவநேசர் – சிவ சிவ :

அருள் ஞானச் செல்வச்சீர்காழித் தலைவர் திருவடிகளுக்கு வணக்கம். அவரது கீர்த்தி யெங்கெலாம் எவ்வாறெலாம் பரவியிருக்கின்றதே! மதுரையம்பதி அடிகளே! அன்னாரைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள்.

மதுரையம்பதி அடியார் :

சீர்காழி அடியவர் சோழ நாட்டினைச் சேர்ந்தவர். யான் பாண்டிய நாட்டவன். பாண்டிய நாட்டில் பரவியிருந்த பிற சமயங்களை வென்று சைவ சமயத்தை நிலை நாட்டியவர் திருஞானசம்பந்தர் என்பது எல்லாரும் அறிவார்களே.

சிவநேசர் :

அரும் பெரும் செயல்களை ஆற்றி வரும் திருஞானசம்பந்தர் பெருமைகளை அல்லும் பகலும் பேசிக் கொண்டிருப்பினும் இனிமை தோன்றிக் கொண்டேயிருக்கிறது. ஓதுவார் அவர்களே! முதற் பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாடலைப் பாடுங்கள்.

ஓதுவார் :

[இராகம்-நாட்டை]

அருநெறிய மறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானி வன்றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தனுரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே]

சிவநேசர் :

கணக்கரே! அடியார்களுக்கு உரிய சன்மானங்களைக் கொணருங்கள். (கணக்கர் கொணர அவற்றை சிவநேசர் தொண்டர்களுச்கும் வழங்குகிறுர். சன்மானங்களைப் பெற்றுத் தொண்டர்கள் சென்று விடுகின்றனர். சிவநேசர் இருக்குமிடம் அவர் துணைவியார் அணுகுகின்றனர்)

சிவநேசர் :

அடியவர்களுடன் உரையாடலில் என்ன இன்பம் !!

சிவநேசர் துணைவியார் :

அடியேனும் பாக்கியவதியாயினேன். எனினும் மனை வாழ்க்கையில் ஒன்று விரும்புகிறேன். அது செல்வத்தால் மட்டும் சிறப்படையாது. திருவள்ளுவர் குறள் தங்களுக்கு நினைவிலிருக்குமே;

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

சிவநேசர் :

ஆம் ஆம். நம் குறை-மகவிலாக்குறை-உணர்ந்தேன். (இந்நிலையில் சிறிது சிந்திக்கிறுர்; மனச்சோர்வு அடைகிறுர்.) அப்பெரியார் திருஞான சம்பந்தர் வழி காட்டுவாரே. அ! ஆ! அவர் பாடிய பாடல்

[இராகம்–நாதநாமக்கிரியை]

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

'பிள்ளை வரத்துடன் எல்லா வரங்களையும் பெற முடியும். சிவபெருமானை வழிபடுங்கள்' என்று ஞானசம்பந்தப் பெருமான் செய்த உபதேசம் இப்போது எவ்வளவு பொருத்தமாக வுள்ளது !!

சிவநேசர் துணைவியார்

அரன் வழிபாடும் அடியார் பணியும் மேற்கொள்வோம். நமது வேண்டுகோள் நிறைவேறு பென்பதில் ஐயமில்லை.

அங்கம் II காட்சி 1

இடம் : மயிலாபுரி சிவநேசர் மாளிகை

காலம் : மாலை

பாத்திரங்கள் : மயிலாபுரி அன்பர்கள், சிவநேசர் உறவினர்கள், கவிஞர்.

சிவநேசர் :

வணக்கம் வருக வருக! அமருங்கள், இந்நன்னாளில் தங்களைக்காண மகிழ்ச்சி!

மயிலாபுரி அன்பர் ஒருவர் :

இன்றைய தினம் மிகவும் மகிழ்ச்சிக்குரிய நற்செய்தி கேட்டு நாங்கள் விரைந்து வந்தோம்.

சிவநேசர் :

இறைவன் அருளாலும் அடியார்கள் ஆசியாலும் நல் ஓரையில் பெண் மகவு பெற்றனம். நீங்கள் எல்லீரும் வேண்டுவன வெல்லாம் பெற்றுச் செல்லுங்கள். அங்கே மறையவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் ! கணக்கரே அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் சேகரம் செய்யுங்கள். பூசனைகள் நடைபெற வேண்டும்.

கணக்கர் :

வேத விதிப்படி தசதினச் சடங்குகள் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவநேசர் :

சாதகச் சடங்கும் முடிப்போம். பல பிறவிப் பயணங்களை முடித்துக் கொண்டு இப்பிறவியைச் சாதகமாகக் கொண்டு பிறந்த உயிர் இனிச் செய்ய உள்ளது தானே சாதக மென்பது. இது நன் முறையில் அமையவேண்டும்.

கணக்கர் :

இதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவநேசர் :

குழந்தைக்கு நாமதேயமும் வைத்து விடலாமே.

கணக்கர் :

செய்துவிடலாம். தக்க ஏற்பாடுகள் செய்துள்ளேன்.

சிவநேசர் :

குழந்தையின் பண்புகளையெல்லாம் கருத்தில் கொண்டு பூம்பாவை என்னும் பெயர் சூடலாம். எனது கண்மணிப் பாவை போன்றது இக்குழந்தை. திருமகள் போன்றுமுள்ளது.

கவிஞர் :

பெயர் மிக அழகாகவிருக்கின்றதே!

காட்சி 2

இடம் : சிவநேசர் மாளிகை

காலம் : மாலை

பாத்திரங்கள் : சிவநேசர் துணைவியார், பூம்பாவை, பெண் தோழிகள்.

பூம்பாவை :

அம்மா! அம்மா! நான் விளையாடச் செல்கிறேன்.

சிவநேசர் துணைவியார் :

என்ன விளையாட்டம்மா?

பூம்பாவை :

கழல், அம்மானை, பந்து, சிற்றில், சிறு சோறு, ஊசல் இவையெல்லாம் தெரியாதனவா?

துணைவியார் :

உன் தோழிகளும் வந்துவிட்டார்களே! சென்றுவா.

பூம்பாவை :

தோழிகளே. முதலில் அம்மானை விளையாடலாமா?

தோழியர்கள் :

ஆடலாமே.

(ஆடுகின்றனர்)

பூம்பாவை :

அம்மானை விளையாட வாருங்கள். நான் பாடல் பாடுவேன். பின் யாமெல்லோரும் சேர்ந்து சிவபெருமானை நினைத்து பாடி ஆடிடுவோம்.

(திரு அம்மானை இராகம்-மோகனம்)

"பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டக் கோலால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனிபாடுதுங்காண் அம்மானை"

உந்தி பறக்கலாம் வாருங்கள்.

[திருவுந்தியார்]

"பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன் தன் தாதைக்கே உந்தீபற"

[திருப்பொன்னூசல் இராகம்-ஆனந்தபைரவி]

"சீரார் பவளங்கால் முத்தங்கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண் மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோச மங்கை
ஆரா அமுதின் அருள் தாளிணை பாடிப்
போரார் வேற்கண் மடவீர் பொன்னூசல் ஆடாமோ"

[ஒரு நாள் மதுரையிலிருந்து சிவனடியார்கள் சிலர் தல யாத்திரை செய்து வந்து ஞான சம்பந்தர் மதுரையில் செய்த அருட் செயல்களை யெல்லாம் விரித்து உரைத்தார்கள். அந்த அருஞ் செயல்கள் முழுவதையும் கேட்ட சிவநேசர் பரவசராகிறார்.]

சிவநேசர் :

பார்த்தாயா-குழந்தைகளின் விளையாடல்கள்! விளையாடும்போதும் சிவபெருமானையே வழிபடுகிறார்களே!

துணைவியார் :

குழந்தையின் குரலின் இனிமையே இனிமை!

சிவநேசர் :

இந்த மகிழ்ச்சியூட்டும் இந்நேரத்தில் என் குருவாம் சீர்காழி வள்ளலாரை அவர் தோன்றிய திசை நோக்கித் தொழுவேன். (கீழே வணங்கி எழுந்து நிற்கின்றார்.) சீர்காழி ஞானசம்பந்த சுவாமிகளுக்கு அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையையும் என் நிதிகளையும் கொடுத்து, என்னையும் அவர்களுக்கு அடிமையாக்கி விட்டேன். இதனால் மகிழ்ச்சியடைகின்றேன்.

அங்கம் III காட்சி 1

நேரம் : காலை

பாத்திரங்கள் : பூம்பாவை, தோழிகள், சுற்றத்தார்கள்

பூம்பாவை :

தோழிகளே! வாருங்கள். சிவபெருமானுக்கு பூக் கொய்து சூட்டலாம்.

[திரு அம்மானை இராகம்-மோகனம்]

"சூடுவேன் பூங்கொன்றைச் சூடிச் சிவன் திண்டோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் அலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்"

கன்னிமாடத்தின் அருகில் தூயநீர் நிறைந்த தடாகம் ஒன்றுள்ளது. அதன் பக்கத்தில் ஒரு பூஞ்சோலை உள்ளது. அங்கே சென்று பூக் கொய்வோம் வாருங்கள்.

[செல்கின்றனர்]

(அது சமயம் ஊழ் வினையானது நச்சுப் பற்களையுடைய ஓர் இளம் பாம்பாகி வந்தது போல மல்லிகை முல்லைக் கொடிகள் படர்ந்த பந்தலிலே மறைந்து வந்து பூம்பாவையின் பூக் கொய்யக் கூட்டிக் கூப்பிய விரலினைத் தீண்டிச் சென்றது. உடன் வந்த தோழிகள் திடுக்கிட்டனர்)

தோழியர் :

நாம் எல்லோரும் பெரும் பாக்கியத்தை இழந்தோம். (கன்னிமாடத்துக்குப் பூம்பாவையைத் தூக்கிச் செல்கிறார்கள்)

(சிவநேசர் உள்ளம் வெதும்பித் திகைக்கிறார். அப்பொழுது கணக்கர் கருட மந்திரங்கள், தியானம் செய்வோர்கள், பாவனை செய்வோர்கள், முட்டி நிலை செய்வோர்கள் ஆகியோர்களை அழைக்கின்றார். பயன் ஏதும் இல்லை.)

மந்திர வாதிகள் :

இது விதிப்பயன். நாம் செய்வதுஒன்றுமில்லை.

சிவநேசர் :

தெளிவடைகிறார்.

சிவநேசர் :

இந்த உலகத்தில் உள்ளவர் எவராயினும் இந்தவிடத்தை இறக்குவாரென்றால், அவருக்கு எல்லையில்லாத செல்வத்தை ஈவேன். கணக்கரே பறையறிவிக்க.

காட்சி 2

(மூன்று நாட்கள் ஆகின்றன. அச்சபையில் உள்ளோர், எல்லையிலாக் கல்வியுடையவர் அனைவரும் வருகின்றனர். சிகிச்சை செய்து பார்க்கின்றனர்.

ஒருவர் :

எங்களால் ஆவதொன்று மில்லை.

[செல்கின்றனர்]

சிவநேசர் :

திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு என்மகளை முன்னமே கொடுத்து விட்டேன். ஆனாலும் அவர் வருமளவும் அவரது உடமையைப் பாதுகாத்து வைக்கவும் இல்லாமல் போய்விட்டதே என்ன செய்வது! ஆனாலும் ஒன்று தோன்றுகிறது. அவரது உடமைப் பொருளாகிய பூம்பாவையின் உடலை எந்த அளவு சேமித்து வைத்துவர முடியுமோ அந்த அளவு சேமித்து வைத்து அவர் வரும் போது அவரிடம் ஒப்புவிக்க வேண்டும். (அவ்வாறு பூம்பாவை உடலைத் தகனம் செய்து தீயினில் எரித்த உடம்பின் எலும்பினையும் சாம்பலையும் அகன்ற கும்பத்தினில் இட்டு, பாவை உயிருடன் இருக்கும் நாளில் போலவே காவல் பொருந்த, கன்னிமாடத்தில் அமையவைத்து,பொன்னும் முத்தும் அணிகலனும் பூந்துகிலும் சுற்றிப் புனைந்து, பஞ்சணையாகிய வாசனை பெய்த பள்ளியின் மீது வைத்து, அதன் மீது கழுத்தணிகளைக் கோலஞ் செய்து மாலையுடன் சந்தனமும் திருமஞ்சனமும் பாற்சோறும் பகல்விளக்கும் பல செய்து அமைத்தனர். இந்த ஆழ்ந்த அன்பினைக் கண்ட பலரும் வியந்து பாராட்டினர்.)

அங்கம் IV காட்சி 1

இடம் : திருவொற்றியூர்

திருஞானசம்பந்தர் :

மெய்யடியார்களே! மெய்யன்பர்களே, நாமெல்லோருமே திருவலிதாயத்திற்குச் சென்று இறை

வணை வழிபட்டோம். இனி இறைவன் விரும்பிவீற்றிருக்கும் திருவொற்றியூர் செல்வோமாக.

அடியார்கள் :

சுவாமி தங்கள் சித்தம்.

திருஞானசம்பந்தர் :

திருவொற்றியூர் அண்மையிலுள்ளது தெரிந்தேன்! அதோ மாபெருந்தொண்டர் கூட்டத்தினர் எதிர்நோக்கி வருகின்றனர். சற்றே நில்லுங்கள்.

[இராகம்-சௌராஷ்டிரா]

"விடையவன் விண்ணும்மண்ணுந் தொழநின்றவன் [வெணமழுவாட்
படையவன் பாய்புலித்தோ லுடைகோவணம் பல்கரந்தைச்]
சடையவன் சாமவேததன் சசி தங்கிய சங்கவெண்தோ
டுடையவனூனமில்லி யுறையுமிடம் ஒற்றியூரே."

இடப வாகனத்தையுடைவன் இப்பூவுலகத்தில் உள்ளோரும் விண்ணுலகத்திலுள்ளோரும் தொழத் தக்கவன்; சடையுடையவன்; சாமவேதம்விரும்புகிறவன்; கடல் சங்குத் தோடுடையவன்; குணபாடு இல்லாதவன்.

[இராகம்-சௌராஷ்டிரா]

ஒண்பிறை மல்கு சென்னியிறை வன்னுறை யொற்றி யூரைச்]
சண்பையர் தந்தலைவன் தமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனைபாடல் பத்தும் பரவிப்பணிந்தேத்தவல்லார
விண்புனை மேலுலகம் விருப்பெய்துவர் வீடெளிதே.

இன்றைய நாள் வழிபாடு நிறைவுபெற்றது. இப்பதியிலே சிலகாலம் இருந்து இறைவனை வழி படுவோமாக.

திருவொற்றியூர் மக்களில் ஒருவர் :

திருவொற்றியூருக்கு ஞானசம்பந்தர் எழுந் தருளியதால் இவ்வூர் புனிதமாயிற்று.

அங்கம் 4 காட்சி 2

காலம் : மயிலாபுரி

இடம் : சிவநேசர் இல்லம்

பாத்திரங்கள் : சிவநேசர், மற்றும் சிலர். ஒருவர்

ஐயன்மீர் வணக்கம்! நற்செய்தி! சீர்காழித் தலைவர் திருஞானசம்பந்தர் திருவொற்றியூர் வந் துள்ளார். அங்கே இறை வழிபாடு செய்து தங்கி யுள்ளார்.

சிவநேசர் :

ஆ! அப்படியா! நற்செய்தி கூறினீர்! சன் மானம் பெற்றுச் செல்லுவிர். (தமது கழுத்திலுள்ள மாலையைக் கழற்றி அவருக்குக் கொடுக்கிறார்.) கணக்கரே! திருவொற்றியூரிலிருந்து திருஞானசம்பந்த சுவாமி கள் விரைவில் திருமயிலைக்கு வரலாம். திருமயிலாப் பூரிலிருந்து திருவொற்றியூர்வரையிலும் நடைப் பந்தல் அமைத்து மேற்கட்டி கட்டவேண்டும். வெயில்,காற்று,பனி முதலியவற்றால் துன்பம் ஏதும் விளையாதவாறு பந்தல் அமைக்கவேண்டும். அதிலே தோரணம், கமுகு, கதலி முதலியவற்றைக் கட்டித் துணியில் சித்திரங்கள் பதித்த கொடிகள் முதலி யவை எல்லாம் வைக்க வேண்டும். தேவலோகம் போல அமைக்க வேண்டும்.

[திருஞான சம்பந்தர் திருவொற்றியூரை வணங்கித் திருத்தொண்டர்களின் திருக்கூட்டத்துடன் திருமயிலையை அணுகுகிறார். அவர்களை நெடுந்தூரத்தில் கண்டு சிவநேசர் தரையின் மிசைவீழ்ந்து வணங்குகிறார்.]

தூரத்திலிருந்து வந்து கொண்டிருக்கும் ஞானசம்பந்தர் அருகில் உள்ள ஒருவர் :

இவர்கள் தாம் இம் மயிலைப்பகுதியின் பெரு நிதி படைத்தவர். சிவனடியே சிந்திக்கும் திருவுடையார். தம் அருமைகளையும் தம் நிதியனைத்தையும் ஏன்! தம்மையுமே தங்களுக்கு அர்ப்பணித்தவர். தம் மகள் பாம்பு கடிக்கப்பட்டிறந்தாள். அவளது எலும்பைக் குடத்தில் இட்டு வைத்து இறை வழிபாடு தொடர்ந்து செய்து வருகின்றார்.

[எல்லாரும் கபாலீசுவரர் கோவிலுக்கருகில் செல்லுகின்றனர். திருஞானசம்பந்தர் கோவிலை வலஞ் செய்து வணங்கி, தேவதேவனை, திருக்கபாலீச்சரத்தமுதை அம்மையப்பனை அன்பு பொருந்திய பண்பினாலே துதித்து நிலமிசை வீழ்ந்து வணங்கிப்பின் துதிக்கின்றார்.]

(சிவநேசரது வருத்தமான நிலையை உணருகிறார்)

திருஞானசம்பந்தர் :

சிவனடிமைத் திறத்திலே செலுத்திய உணர்வினையுடைய சிவநேசரே! அரிய தவத்தின் பயனைப் பெற்ற உங்கள் குழந்தையின் எலும்பு நிறைந்த அக்குடத்தினை இப்பெருங் கோவிலின் திருமதில் புறத்துக் கொண்டு வருக.

சிவநேசர் : (மகிழ்ச்சியுடன் நிலமிசை வீழ்ந்து வணங்கி)

இதோ !

அங்கம் V காட்சி 1

இடம்: கபாலீசர் திருக்கோபுரத்தின் திருக்குளக்கரை.

பாத்திரங்கள்: திருஞானசம்பந்தர், மயிலைநகர் மக்கள் பிற சமயத்தவர்கள், அடியார்கள்.

(சிவதருமங்கள் செய்து வீடுபெறுதற்பொருட்டு இப்புவனியில் தங்கி வாழும் விண்ணவர், நாகர் முதலியவர்)

(சிவநேசர் குடத்தினைச் சந்நிதி முன் வைத்து வணங்குகிறார்)
(திருஞானசம்பந்தரது அருள்நோக்கு அக்குடத்தின்பால் செல்லுகிறது)

[இராகம்-நாதநாமக்கிரியை]

1 மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்.

2 மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணுதே போதியோ பூம்பாவாய்.

3 வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்.

4 ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணுதே போதியோ பூம்பாவாய்.

5 மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தாண்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

6 மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிகளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

7 மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.

8 தண்ணா ரரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கட மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியே பூம்பாவாய்.

9 நற்றா மரைமலர்மே லான்முகனு நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்களேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்.

10 உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்களெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

11 கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

(தூல உடலினின்றும் உயிர் நீங்குங்கால், உடம்பினை அந்த உயிர் பெறும் வரை அதுசூக்கும உடலுடன் கூடியிருக்கும். அச்சூக்கும உடலுக்கும் தூல உடலுக்கும் காரியத்தொடர்ச்சி உண்டு. அதனால் தூல உடம்பின் பாகமாகிய எலும்பிற்குச் செய்யும் நற்செயல் அச்சூக்கும உடலிலுள்ள உயிருக்குப் பயனளிக்கிறது)

[இப்பாடல்கள் முறையாகப் பாடுங்காலே முன்னர் விடத்தினல் பிரிந்துபோன பிராணவாயு திரும்பிவந்தது. எலும்பும் சாம்பலும் நிறைந்த குடமே பற்றுக்கோடாக ஏற்பட்டது. இக்குடமே சுவாமிகள் தோற்றுவித்த பாவையாரின் பிறப்பிற்குரிய உடம்பு தங்கி உருவாகிப் புறப்படும் இடமாகிற்று. குடம் உடைந்தவுடன் முன்கை தோன்றிற்று. தாமரையிலிருந்து எழுந்தவள்போல 12 ஆண்டுகளுக்குரிய முழு வளர்ச்சியைப் பெற்றுப் பூம்பாவை எழுந்தனள். குழந்தைக்கு விடந்தீண்டிய போது வயது 7. இப்போது ஐந்து ஆண்டுகள் வளர்ச்சியைப் பெற்று 12 ஆண்டு வயதினளாகப் பூம்பாவை தோன்றுகின்றாள்.]

அங்குள்ளவர்கள் :

பாருங்கள் பூம்பாவையை! அற்புதம்! அற்புதம்!

தொண்டர்கள் பலர் :

அரகர அரகர அரோகர.

(தேவர்கள் பூமாரி சொரிகின்றனர்)

மக்கள் :

இவையெல்லாம் எம் நாயகராகிய சிவபெருமான் கருணையின் விளைவே! அரகர அரோகர!

[பூம்பாவையாரின் வனப்பு தெய்வீக வனப்பு அவளது அழகைக் கண்களால் முற்ற ஒருங்கே காண இயலாது. குழலின் பாரம் முகத்தாமரையிற்சூழும் வண்டின் ஒழுங்கு போல் தோன்றிற்று. குழலின்பாரம் அழகின்மாரி. நியதித் தத்துவத்துள் நின்று பாவையாரை முன்னர் மறக்கருணை செய்து அழித்தெரித்த அத்தெய்வ நிலையே ஈண்டு அறக் கருணை செய்து முன்னர் நின்ற வளர்ச்சியுடன் மீள உற்பவித்தலால் ஈண்டுக் கண்ணுதல் கருணை வெள்ளம் காணப் படுகிறது.]

பூம்பாவை : [திருஞானசம்பந்தரை வணங்குதல்]

திருஞானசம்பந்தர் :

அழகினில் சிறப்புற்ற உங்கள் மகளை உங்கள் மனைக்கு இட்டுச் செல்வீராக.

சிவநேசர் :

அருமையினுல் அடியேன் பெற்றெடுத்த இப் பூம்பாவையைத் தாங்கள் திருமணம் புரிந்தருள வேண்டும்.

திருஞானசம்பந்தர் :

இப்போதுள்ள பூம்பாவையை நீங்கள் பெற்ற குழந்தை எனல் ஆகாது. நீங்கள் பெற்ற குழந்தை விடத்தினுல் முன்பே இறந்தது. இப் பூம்பாவை கபாலீச்சரது திருவருளால் என்னுல் தோற்றுவிக்கப்பட்டதால், நீங்கள் கூறும் கருத்து ஏற்கேன். ஆதலால் உங்கள் சொல் தகாது.

(சிவநேசரும் சுற்றத்தாரும் மயங்கினர்)

திருஞானசம்பந்தர் ஆறுதல் கூறுகின்றனர்.]

[பின் திருஞானசம்பந்தர் திருக்கோயிலுட் செல்லல்]

சிவநேசர் :

பூம்பாவையை ஏனையோருக்குத் திருமணம் செய்விக்க இசைகிலேன். சிவம் நித்திய மங்கலம் ஆதலால், கன்னி மாடத்தில் அவள் சிவத்தை மேவி இருக்கச்செய்வேன்.

[திருஞான சம்பந்தர் வழிபாடு செய்து மயிலை விட்டுச் செல்லல்]

(சிவநேசர் வருத்தமிக்க விடைகொடுத்தனுப்புதல்)

[திருஞானசம்பந்தர் திருவான்மியூருக்குச் செல்லல்]

அங்கம் VI

இடம் : மயிலை மைதானம்

பாத்திரங்கள் : மயிலை வாழ் மக்கள், மயிலைப் பிரமுகர் மயிலை அடியார், மயிலைப் புலவர், பிறநாட்டவர்.

மயிலைப் பிரமுகர் :

எல்லாருக்கும் என் வணக்கம் உரித்து. நம் நாட்டிற்கு அப்பால் நெடுந்தூரத்திலிருந்து வந்துள்ளார் இப்பெரியார். பல ஆண்டுகளாக இந்நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று சிறந்த நல்லுரைகள் வழங்கி நம்மெல்லோருக்குமே உதவி புரிந்துவந்த இப்பெரியார் தம் நாடு செல்வதாக உள்ளார். அத்தகையவரைப் பாராட்டி வழி அனுப்புவது நம் கடமையாகும்.

பிற நாட்டவர் :

யர்தொரு பாராட்டுதலுக்கும் யான் தகுதியுடையன் அல்லன். என்னைப் பாராட்டிப்பேசி நேரத்தைக் கழிப்பதைவிட ஒன்று வேண்டிக்கொள்வேன்; அது சிறந்தது; பயன் மிகுதியாக அளிக்கத்தக்கது:

இங்குள்ள அறிஞர்களில் ஒருவர் இப்பகுதியில் நிலவியுள்ள தெய்வீகக் கொள்கையைச் சுருக்கமாக விளக்குவார் எனில் நன்று; மேலும், புகழ்பெற்ற இக்கபாலீச்சரத்திற்கு எழுந்தருளிப் பூம்பாவையின் என்பு பெண்ணுருவாக்கிய காலத்தில் திருஞான சம்பந்தர் பாடிய பாடல்களுக்கு மற்றொருவர் ஓரளவாயினும் விளக்கம் கூறுவாராயின், அது எனக்கு மிகுந்த பயன் விளைக்கும்.

மயிலைப் பிரமுகர் :

நல்வினைப்பயனாக மயிலைப் புலவரும் மயிலை அடியாரும், இங்குள்ளார்கள்; அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

மயிலைப் புலவர் :

இச் சிறிய கால அளவில் சைவ சமயத்தின் கோட்பாடுகளை மிகச் சுருக்கமாக ஒருவாறு விளக்க முயற்சி செய்கிறேன். நாம் இவ்வுலகினைக் காண்கிறோம். இவ்வுலகினுக்குக் காணப்படாத முழுமுதற் கடவுள் உள்ளார். அவர் உருவமுடையவராகவும், உருவமே இல்லாதவராகவும், இவ்விரண்டுமல்லாதவராகவும் உள்ளார். அவர் எப்பொழுதுமே நித்தியமாய், அறிவோடு கூடியவராய், இன்பமயமாய் இருக்கின்றார். இதனால் அவருக்கு சச்சிதானந்தம் எனப் பெயர் சூடுவோம். எல்லாரும் வணங்கும் பொருட்டு அவர் உருவத் திருமேனி தாங்கி விக்கிரகங்களின் மூலம் வழிபாடு செய்யப்படத்தக்கவராகவும் உள்ளார். இறைவன் நிலை இவ்வாறிருக்க, ஆன்மாக்கள் நிலைமைபற்றி ஆராய்வோம். ஆன்மாக்கள் (உயிர்கள்) அளவிடுவதற்கரியபெரிய எண்ணிக்கையில் உள்ளன. இவையும் நித்தியமாய் உள்ளன. இவை பன்னெடுங் காலமாக அறியாமை

யால் துன்பமுற்றிருந்தன. இவ்வுயிர்கள் இறைவனை வழிபடுவதால், தம்மிடமுள்ள அழுக்கு நீக்கம் பெறுகின்றன. அப்போது இவை தூய்மை பெறுகின்றன. இவற்றின் அறிவு முதிர முதிர இவை ஒவ்வொரு பிறப்பையும் விடுத்து மேலும் மேலும் பிறவிகளை எடுக்கின்றன. ஒரு பிறவியில் செய்த வினையை அடுத்த பிறவியில் அவை அனுபவிக்கின்றன. இவ்வுயிர்கள் உடம்பையும், கை கால் முதலிய உறுப்புக்களையும், இடத்தையும் பயன்படுத்திக் கொண்டு போகத்தை அனுபவிக்க உதவும் வகையில் அறிவில்லாத ஜடப்பொருள் என்றுமுள்ளது. இத்தகைய நிலையில் உயிருக்கு வேருய் எல்லா அறிவும், எல்லா ஆற்றலும், எல்லா இன்பமும் உடையதாய், உலகுயிர்களுமாய், அவற்றின் வேறுமாய், அவற்றினுள்ளுமாய், சிவஞான சித்தியார் கூறுவது போல்,

"உலகெலாமாகி, வேருய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையின் அமர்ந்துசெல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தானே]
நிலவு சீரடிலனாகி நிற்கின்றனன் நீங்காதெங்கும்"

அத்தகைய பெருமானை நாம் வழிபடுவோமேயெனில் நம் வினைப்பயன் தளர்வுறும். நமக்குக் கேடுவரா. நம் உற்ருர் உறவினர் எல்லாருமே வாழ்வார்கள்.

[இராகம்-ஆரபி]

"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே"

மயிலைப் பிரமுகர் :

மயிலை அடியார் தம் கருத்தை இனித் தெரிவிப்பார்.

மயிலை அடியார் :

இந்நிலையில் திருஞானசம்பந்தர் அருளிய பூம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் காண்போம். இப்பாடல்களுக்குப் பூம்பாவைப் பாட்டு என திருஞானசம்பந்தர் தாமே பெயர் சூட்டியிருக்கிறார்.

அடியவர்களுக்கு அமுது செய்வித்தல் மகேசுவர பூசையாகும். பத்தரது திருவேடத்தைப் பரமேசுவரன் எனக்கொண்டு வழிபடவேண்டுமென ஞான நூல் கூறுகின்றது. இவ்வாறு வழிபடும் போது தெளிவு ஏற்டுவது இயற்கை. அடியவர் வடிவில் உண்ணின்று அமுது செய்து பயன் தருபவர் சிவ பெருமானே ஆவர் என்பது தெரிந்து கொள்ளத்தக்க உண்மையாகும். மேலும் சிவபெருமானை முன்னிட்டுச் செய்யப்படும் விழா எப்போதும் பெருவாழ்வாகிய வீடுபேறு பெறுவதற்கு உதவும். இவ்விரு கொள்கைகளும் இப்பாடல்களில் விளக்கம் பெறுகின்றன.

பிற நாட்டவர் :

இதுவரை கேட்டிருந்தவற்றைச் சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கிறேன். மெய் சிலிர்க்கின்றது. இந்திய நாட்டு நூல்களும் அடியவர்கள் வரலாறும் மனித வாழ்விற்கு நல்லிலக்கிய சான்றுகளாக உள்ளன. சமய வாழ்வில் இங்கு மக்கள் திளைத்திருப்பதால், அன்பும் அறனும், அருளும் ஒழுக்கமும் இணைந்து காட்சியளிக்கின்றன. இங்கு மலைகளிளெல்லாம் குன்றுகளிலெல்லாம் முருகக் கடவுள் காட்சியளிக்கிறார்; வனங்களிலெல்லாம்

குளங்களிலெல்லாம் திருமாலின் திருக்கோலம்; மலர்களின் இறை மணம் வீசுகின்றன; தோகை மயில்கள் இறைவன் திருநடனம் செய்கின்றன; கீத மினிய குயில்கள் அவ்விறைவனது திருநாமத்தைச் சொல்லி இன்புறுகின்றன.

எங்கும் இறை மணம்! எங்கும் தெய்வ ஒளி! எங்கும் அன்பு முறை! இத்தகைய சூழ்நிலையில் அன்பும் அருளும் பொங்குகிறது; துன்பமும் தீமையும் அகல்கின்றன. அண்டத்து நாயகனுகிய இறைவனது ஆட்சியில் அகில சகோதரதத்துவம் தோன்றுகிறது. Universal brother hood of man and Fatherhood of god என ஆங்கிலத்தில் சொல்வர்கள். அந்நிலைமை இங்குத் தாண்டவம் புரிகின்றது. பெரியோர்களே! உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் இத் தெய்வ நெறியினின்றும் விலகிடாதீர்கள். உங்கள் நாட்டில் உள்ள தெய்வீகக் கொள்கையை நான் செல்லுமிட மெல்லாம் எடுத்துச் சொல்வேன் அதைப் பாராட்டுவேன்: இக்கூட்டத்தை நடத்தி என்னை சிறப்பித்தமைக்காக எனது நன்றியை நான் எவ்வாறு தெரிவிப்பேன்? வணக்கம்.

மயிலைப் பிரமுகர் :

இங்கு வந்துள்ளோர் அனைவருக்கும் என் நன்றி உரித்து. மிகத்தொலைவிலிருந்து வந்துள்ள இப்பெரியார் இன்பமாகத்தம் நாடு சென்றுதெய்வப் பணியாற்ற இறைவன் அவருக்கு எல்லா வகையிலும் அருள்புரிவாராக.

இறை வணக்கம்

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்க்கவே"

"வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"



பூம்பாவைக்கோயில்

"பூம்பாவை"

[இடை வேளை நகைச்சுவைக்காட்சி]

(INTERLUDE)

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே".

—சம்பந்தர்

நாம் உண்ணும் உணவில் அறுசுவைகளை அனுபவிக்கிறோம். இலக்கியகளில் எண் சுவைகள் உள்ளன. அவையாவன நகை, இரங்கல், இளிவரல் மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை. இவற்றுடன் சமநிலை என்பதையும் சேர்த்து சுவைகள் ஒன்பது என்பதாகக் கொண்டு அவற்றை நவரசம் என்பாரும் உளர். பக்தர்கள் தெய்வ வழிபாடு செய்யும் முறையில் இச்சுவைகளை அனுபவிக்கிறார்கள், அவர்கள் பாடியருளிய பாடல்களை ஓதும் போது அவர்கள் சுவைத்த சுவைகளை, ஓரளவிலாகிலும் நாம் சுவைக்க இயலுகிறது. அச்சுவைகளை ஒவ்வொன்றாகச் சுவைத்து இன்பமடைவோமாக.

1. நகை

[ஒருவர் தாம் தமதுகடமையை ஆற்றாதபோதும் தம்மைத்தாம் நோக்கியும், பிறர் தம் கடமையை ஆற்றாத போதும் பிறர் மாட்டும்நகைப்பார். பிறரை நோக்கி நகை யாடலைவிட, நம்மை நோக்கி நாமே நகை புரிவோ மென்றால். நம் குறைபாடுகள் நமக்கு நன்கு விளங்கும்.]

நாயகி தன் நாயகனிடம் அன்புடையவளாக இருக்கிறாள். இவ்வாறு இருந்தும் தான் கொண்டுள்ள அன்பு இன்னும் அதிக அளவில் இல்லைஎனக்

கருதி மன நிறைவு கொள்வதில்லை. தன்னுடனே எப்பொழுதும் இல்வாழ்க்கை நடத்தும் தன்கணவன் இந்நிலையைத் தெரிந்து கொண்டிருக்கக்கூடும். இதைச் சிந்தித்துப் பார்த்தவுடன்நாயகிக்குச்சிரிப்பு வந்து விடுகிறது. இதுபோன்றது உண்மை அடியாரது நிலைமையும். தம்முடன் என்றுமுள்ள இறைவன் எல்லாம் உணரும் ஆற்றலுடையார். அடியாரும் தாம் இறைவனிடம் முழு அன்பு கொண்டிராததை இறைவன் உணர்வார் என்பதைத் தெரிந்து கொண்டதுபோல அடியார் சிரிக்கிருர். அதுவும் விலா எலும்பு முறிந்து விடுமாறுஅவ்வளவு அதிக மாகச் சிரிக்கிருர். அவ்வாறு சிரிப்பவர்கள் அப்பர் அடிகளும் தொண்டரடிப் பொடி ஆழ்வாரும்.

அப்பர்.

தனித் திரு நேரிசை

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
    கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
    தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம்
    உடன் இருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
    விலாவிறச் சிரித்திட்டேனே''

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

''உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான்
    உணர்வொன்றில்லாக்
கள்ளத் தேன் நானும் தொண்டாய்த்
    தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற் றெல்லாம்
    உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான்
    விலாவறச் சிரித்திட் டேனே''

2. இரங்கல்

[இது அவலச் சுவை எனப்படும். அழுகை இதன் தன்மையது. தாம் வருந்துவது கண்டு பிறர் வருந்துவது கண்டும் மனமிரங்கும் வகையில் இச்சுவை தோன்றும்.]

திருஞான சம்பந்தர் திருச் செங்காட்டங்குடியிலிருந்து திருமருகலையடைந்து இறைவனுக்கு வழிபாடு செய்து அங்குத் தங்கியிருந்தார். அந் நாட்களில் ஒருநாள் வணிக இளைஞன் ஒருவன் தன் மாமன், வைப்பூர் கோன் தாமன் என்பவனது மகளுடன் அங்கு வந்திருந்தனன். அப்போது அரவம் தீண்டப் பட்டதால் அவன் இறந்தான். அவனை மணக்கும் பொருட்டு அவனுடன் வந்திருந்த அக் கன்னி "மருகற் பெருமானே இரங்காயோ!" என அழுததைக் கேட்டுத் திருஞானசம்பந்தர். அவளது வரலாற்றைக் கேட்டறிந்து, அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் மருகற் பெருமான் மனமிரங்குமாறு பாடினர்.

திருஞான சம்பந்தர் :

"மழுப்படையுடன் திருமருகலில் எழுந்தருளிய பெருமானே! இக்கன்னியை நோக்குக. இவள் உன் பால் என்றுமே அன்பு செலுத்துதலிருந்தும் தவறுதவள். 'எம் பெருமான் திருவடிகள் வாழ்க' எனச் சொல்லிக் கொண்டே எழுந்திருப்பாள். உன்னை இரவும் பகலும் இடைவிடாது நினைத்துக்கொண்டே இருப்பாள். இத்தகைய கன்னிக்குத் துயர் உண்டாக்கினையே! இது முறையா?

இந்தளம்

"வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனு
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே."

தெய்வ வழிபாட்டில் திளைத்திருக்கும் தம் மகளைக் கண்டிரங்குவது போல், தாய் நிலையில் கூறுகிறார் நம்மாழ்வார். பக்தியில் ஈடுபட்டுள்ளவர், மகள் நிலையில் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

நம்மாழ்வார் :

பார்த்தீர்களா என் மகள் நிலைமையை முன்பு இவள் ஒரே இடத்தில் இருக்கமாட்டாள். இப்போது ஒரே இடத்தில் இருந்து கொண்டு, 'இதோ இந்த நிலமே முன்பு வாமனவதாரத்தில் அப்பெருமாளால் அளக்கப்பட்டது' எனச்சொல்லிப் பூமியைத் துழாவிக்கொண்டே இருக்கிறாள். பின்னர் 'அதோ அவர் வசிக்கும் இடம் வைகுந்தம்' என்று சொல்ல விரும்புகிற அளவில் தனக்கு ஏற்பட்ட வருத்த மிகுதி காரணமாகத் தன் கையால் ஆகாயத்தைச் சுட்டிக் காட்டுவாள். "அப்புண்ணிய இடம் இருந்தும் அதை விடுத்து இங்கு இருத்தல் தகுதியோ, என்பதாகக் கண்ணீர் அவளது உள்ளத்திலிருந்து பெருகும் அங்கே நின்று கொண்டு 'அன்னே!' என்பதான துக்கக்குறிப்போடு 'கடல் வண்ண நிறமுடையவன்' எனத்தன் நாயகன் பெயரைச் சொல்லுவாள். யான் என்ன செய்வேன்? அப்பெருமாளை வரவழைத்து இவளைத் தேற்றுமாறு செய்வேனா 'பொறுத்திரு' என்று சொல்லி இவளை நான் தேற்றுவேனா? இன்னது செய்வது என்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்கு நிற்கும் மங்கையிர்! உங்களுடைய கைவளையல்கள் கழலாமல் உள்ளனவே. நீங்கள் என்ன உபாயத்தைச் செய்தீர்கள்? என் மகளது கை வளையல்கள் கழன்று விட்டனவே! நீங்கள் செய்த உபாயத்தை, இவளைப் பொறுத்தவரையில், செய்து பார்க்கிறேன்.

திருவாய் மொழி

"மண்ணையிருந்து துழாவி
வாமனன் மண் இது வென்னும்
விண்ணைத் தொழுது அவன்
மேவு வைகுந்தமென்று கை காட்டும்
கண்ணையுண்ணீர்மல்க நின்று
கடல் வண்ணன் என்னும் அன்னே என்
பெண்ணைப் பெருமயல் செய்தார்க்
கென் செய்வேன் பெய்வளையீர்"

3. இளிவரல்

[மூப்பு முதலியவை எய்திய காரணமாக இளிவரல் அல்லது இழிவு தோன்றும்.

வயதான நாயகி, தான் இளவயதினளாய் இருக்கும்போது தன்னுடன் இல்லறம் நடத்திய தன் கணவர் இப்போது' நாயகி மூப்பு அடைந்து விட்டாள், என்ற காரணமாக தன் தலைவர் தன்னைந் இகழ்ந்து விடுவாரோ என்பதாகத் தன்னை இழிவு படுத்தும் வகையில் கூறுவாள். இவ்வகையில் இளிவரல் சுவை தோன்றும் இதுபோன்றதே அடியார் நிலையும், உடல் தளராத நிலையிலிருக்கும் போது இறைவனுக்கு வழிபாடு செய்ய நம்மால் இயலும். உடல் வாடி, நடைதளர்ந்து, வாய்குளறும் அந் நாளில். முன்னாளில் வாயாரப்பாடும் ஆற்றல் பெற்றிருந்தோருக்கும் வழிபாடு செய்வதில் தடுமாற்றம் ஏற்படக்கூடும் அப்போது "எம்பெருமான் இந் நிலையை முன்னிட்டு என்னை இகழ்ந்துவிடுவாரோ" என அடியவர்தம் நிலையை இகழ்ந்து கொள் வார்.]

அப்பர் :

"சொற்களால் ஆகிய மாலைகளைக் கொண்டு பரம்பரை பரம்பரையாகத் துதிக்கின்ற இனங்களில் தோன்றிய குயில்காள்! கோடுகள் பலவற்றையுடைய வண்டுகள் பாடிக் கொண்டிருக்கும் திருப்பழனத்துன் எழுந்தருளியிருக்கும் ஆபத்சகாயர், அந்திமாலைச் சந்திரனைத் தலையில் அணிந்து கொண்டுள்ளார்; அவர் பொன் மாலை மார்பையுடையவர்; அவர் என் தலைவர். முன்னர் என்னிடம் அன்பு கொண்டிருந்தார். இப்போது நான் தளர் 'வய்தினேன்?' என்பதாக என்னை அவர் இகழ்ந்து விடுவாரோ? ஓ! ஓ!! அவ்வாறு நினைக்க இடமில்லை. தஞ்சம் புகுந்த சந்திரனுக்குத் தம் தலை மீது அவர் இடம் கொடுத்தார்! அத்தகைய பேராளன் என்னை எந்நிலையிலும் கைவிடமாட்டார்.

பழந்தக்கராகம்

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே
பன் மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச் சென்னிப்
பொன்மாலை மார்பன் என் புதுநலமுண்டிகழ்வானே"

திருமங்கை யாழ்வார்

திருநெடுந்தாண்டகம்

மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த-நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கும் மகரம் சேர்குழையும் காட்டி
என்நலனும் என் நிறைவும் என்சிந்தையும்
என்வளையும் கொண்டு என்னையாளும் கொண்டு
பொன் அலர்ந்த நறுஞ்செருத்திப் பொழிலின் ஊடே
புனலரங்கம் ஊரென்று போயினரே"

4. மருட்கை

(மருட்கை வியப்பாகும். நாயகிதன் தலைவரிடத்து அருங்குணங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு தன்னை மறந்திருப்பதுண்டு. அது கண்டு நாயகியின் தாய் தன்மகள் நிலைமைப்பற்றி வியப்படைவாள். இவள் தன்தலைவருடைய குணங்களை நேரில் கண்டறிந்தாள் போலிருக்கிறது! எனக் கருதுவாள். இதுபோன்றதே அடியார் நிலையும். ஒருதாய் அத்தகைய தம் மகளை (அடியாரை)க் கண்டு வியப்படைவது போல் அமைகிறது இவ்வகையில் பாடப் பெறும் பாடல்கள்.)

அப்பர்

"என்மகள் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறாளே! என்தலைவர் பழி இல்லாதவர் புகழ் உடையவர். பால்

வெண்ணீறு தரித்துள்ளார். தூய்மையானவர். அதனோடு எல்லா வல்லமையுமுடையவர். காளை வாகனமாகக் கொள்ளக் கூடிய ஆற்றலுடையவர். சாதாரணமாக யாவருக்கும் இரண்டு கண்கள் மட்டும் இருக்கும்; இவருக்கேகண்கள் மூன்று! தவிரவும் பெண் இனத்தவர் பால் இவருக்கு எப்போதும் இரக்கம் உண்டு. ஏன்? கங்கை ஒரு பெண் அது காரணமாக, அவள் உக்கிரமாக எழுந்தபோதிலும், தம் சடைமீது அவளுக்கு இருப்பிடம் அளித்தார்; நானோ சந்தேகமாகவுள்ளவள்; என்னை ஏன் அவர் ஆதரிக்காது விட்டுவிடுவார்? என்கிறாள், இவ்வாறு விளக்கமாக கூறுகிறாள். உண்மையில் இவள் தன் தலைவனர் நேரில் கண்டு அவரது குணாதிசயங்களில் ஈடுபட்டிருப்பாள் போலிருக்கிறது.

[அப்பர்-காந்தாரம்]

“பழியிலான் புகழுடையான் பால்நீற்றன்
ஆனேற்றன் என்கின் றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் இரண்டல்லமூன்று
உளவே என்கின் றாளால்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே என்கின்றாளால்
கழியுலாம் சூழ்ந்த கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள் கொல்லோ”

திருமங்கையாழ்வார் :

“சிலையிலங்கு பொன் ஆழி
திண்படை தண்டொண்சங்க மென்கின் றாளால்
மலையிலங்கு தோள் நான்கே
மற்றவனுக் கேற்றதா என்கின் றாளால்
மலையிலங் குரும் பயலை
முன்போட அன்போடியிருக் கின்றாளால்
கலையிலங்கு மொழியாளர்
கண்ணபுரத்து அம்மானைக் கண்டாள்கொல்லோ.

5. அச்சம்

[அச்சம் என்பது பயம் கொடுமைகளையும் பாவங்கள் புரிவோர்களையும் கண்ட விடத்து அச்சம் தோன்றும்.] இறைவனிடத்து அன்பிலாத வரைக் கண்டால் அச்சம் தோன்ற வேண்டுமென்பது அடியார்கள் தெரிவிக்கும் கருத்தாகும். "ஒருவர் முன் பிறப்புகளிலோ இப்பிறவியிலோ தீவினை செய்திருப்பாரோ இல்லையோ எனக் கண்டு கொள்ள வேண்டுமானால் அவரை உற்று நோக்குங்கள். சிவ சிவ என அவர் சொல்ல வில்லை என்றால் அவர் தீவினையாளர் எனக் கொள்ளுங்கள்" என்பதை "சிவ சிவ என்கிலர் தீவினையாளர்" என்கிறார் திருமூலர்.

திருவள்ளுவர் :

"தீ ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒருடம்பை அல்லது ஒரு பொருளைச் சுடும். ஆனால் தீய செயல்களோ அச்செயல்களுக்குக் காரணமானவரைப் பிறவிகள் தோறும் தொடரக் கூடும். தீ ஒரு பொருளை அச்சமயத்திலே அழித்துவிடும். தீய செயல்களோ பாவத்தையே விளைவித்துக் கொண்டிருக்கும் ஆதலால்

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

ஆதலால் அஞ்சப்படத்தக்கவற்றிற்கு ஆன்றோர்கள் அஞ்சுவார்கள். இத்தகைய தீய செயல்கள் கண்டு அஞ்சாதிருத்தல் அறியாமையோகும்.

"அஞ்சுவதஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

மாணிக்கவாசகர் :

கொடிய அம்பு என்மீது எய்யப்படுவதாக இருந்தாலும் இதற்கு நான் அஞ்சமாட்டேன். உடலையும் உயிரையும்

இருகூறுகச் செய்பவனுகிய அந்தக் கூற்றுவன் (யமன்) கோபத்துடன் வருவனுயினும் அவனைக் கண்டு அஞ்ச மாட்டேன். ஆனுல் ஒருவரைக் கண்டு அஞ்சுவேன். நீண்ட சந்திரனைத் தமது தலையில் அணிந்துள்ள அப்பெருமானை நினைந்து நைந்து, நெக்கு உருகி ஒளி பொருந்திய தம் முடைய கண்களிலிருந்து, நீர் பெருக வாழ்த்தித் துதித்து அந்நிலையிலே அப்பெருமானைப் புகழாதவரைக் கண்ட விடத்து யான் அஞ்சுவேன்.

அச்சப்பத்து :

"கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணி யினுனை
நினைந்து நைந்துருகி நெக்கு
வாணிலாம் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே"

6. பெருமிதம்

[பெருமிதம் என்பது வீரம் எனப்படும். உள்ளப் பூரிப்பால் இது எழும். "Feeling oneself great" என்பதாக ஆங்கிலத்தில் கூறுவார்கள். இறைவன் அருளில் திளைத்த பக்தர்கள் இவ்வாறு பெருமை கொள்வார்கள்.]

திருநாவுக்கரசர் :

எங்களுக்குத் தலைவர் சிவபெருமான் ஆதலால் நாங்கள் மற்றெவருக்கும் அடிமைப் பட்டோம் அல்லோம். மார்க் கண்டேயர் உயிரைக் கவர்ந்து செல்வதற்காக வந்த யமனை உதைத்த சிவபெருமான் இருக்கும்போது அந்த யமனைக் கண்டு அஞ்சமாட்டோம். இவ்வுலகில் நாங்கள் பொய் வாழ்வு மேற்கொள்ளவில்லை ஆதலால் நாங்கள் நரகத்திற்கு செல்லமாட்டோம். சிவபெருமானது ஒப்பற்ற பாதுகாப்

பில் நாம் இருப்பதால் எங்களுக்கு எத்தகைய பிணியும் ஏற்படாது. அப்பெருமான் சங்கரன், "சம்" என்பது சுகம்-சுகத்தைச் செய்பவர் அவர் ஆதலால் எங்களுக்கு எப்போதும் இன்பமே.

, நாங்கள் சீவர்கள். எங்களுக்குரிய சீவத்தன்மை குறுகி விட வேண்டும். அதற்காக அப்பெருமான் திருவடிப் பேறு பெறுவதற்காக நாங்கள் தருக்குடன் தலைநிமிர்ந்து செல்லாமல் பக்தியுடன் அப்பெருமானுடைய திருவடிகளைக் குறுகுவோம் அங்கிருந்து திரும்பி வராத மீளா ஆளாவோம்

திருத்தாண்டகம் :

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"

திருப்பல்லாண்டு அருளிய சேந்தனர்

"சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ், ஆரும்பெருத அறிவு பெற்றேன்" அப்பெருமானையாம் எல்லோரும் சேவிக்கும் பெருமைபெற்றேம். அப்போது யார் வந்திருந்தார்கள் எனத் தெரிய வேண்டுமா? திருவாதிரை நாள் அந்நாள். அந்நாளில் நாராயணன், பிரமதேவன் சூரியன் இந்திரன் தேவர் கூட்டங்கள் ஆகியோர்கள் எல்லாரும் திசை திசை நிறைந்து அப்பெருமானது தொன்மையான புகழைப் பாடுகின்றார்கள். ஆடுகின்றார்கள், இந்த வைபத்தில் நாமும் கலந்து கொண்டோம். இப்பெருமை யாருக்குக் கிடைக்கும். இப்பெருமையைத் தெரிவிக்கும் வகையில் அப்பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம்."

சேந்தனர்—திருப்பல்லாண்டு :

"ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரை நாள்
நாராயணனொடு நான் முகனங்கி
யிரவியு மிந்திரனும்
தேரரர் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே"

7. வெகுளிச் சுவை

[உலக வழக்கில் தீய செயல்களைப் பெரியோர்கள் காண நேர்ந்துவிடத்து அவற்றைக் கண்டிக்கும் வகையில் வெகுளி தோன்ற நிலைமையை அவர்கள் எடுத்துக் கூறுவார்கள். இதை ஆங்கிலத்தில் "Rightful indignation" எனக் கூறுவார்கள். ஆனல் அன்பு மிக்க அடியாரிடத்து வெகுளி தோன்ற நியாயமில்லை. எனினும் உயிர்களைக் காக்கும் பொறுப்புள்ள இறைவனை நோக்கி வெகுளியைக் காட்டும் வகையில் அடியார்கள் சில சமயங்களில் அடியார்கள் எடுத்துக் கூறுவதுண்டு.]

இரு கண்களின் பார்வையை இழந்த சுந்தரர் ஒரு கண்ணின் பார்வையை இறைவனருளால் பெற்ருர். மற்றகண்ணின் பார்வையையும் பெருதநிலையில் இருந்த சுந்தரர் திருவாரூர்ப் பெருமானிடம் கேட்கிருர் ஒரு கேள்வி.

"தியாகராஜப் பெருமானே என்னை விற்றுக்கொள்ளவும் உனக்கு உரிமையுண்டு. நான் மனமாரக் குற்றம் புரிந்ததில்லை. கண் இழந்து விட்டேன். இந்தப்பழி உன்னைச் சாரும். நான் கெட்டால் கெடுகிறேன். நீரே வாழ்ந்து போதீரோ"

'விற்றுக்கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து
போதீரே''

வெகுளிச் சுவையை வேறொரு வகையிலும் காணலாம் (தலைவன் தான் திருமணம் செய்து கொள்ள விரும்பிய கன்னியைக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. அவளைப் பெறுவதற்காக, அவளது உருவத்தையும் தனது உருவத்தையும் ஒருபடத்தில் எழுதி அதில் தங்கள் இருவர் பெயர்களையும் பொறித்து பனைமடலால் செய்ததொரு குதிரையில் ஊர்ந்து செல்வான். இதற்கு மடலூர்தல் என்பது பெயர். இச் செயலைக் கண்ணுற்ற பெரியோர்கள் தலைவரது ஆர்வத்தைச் சோதித்தறிந்து அவன் காதலித்த கன்னியை அவனுக்குத் திருமணம்செய்துமுடிப்பார் கள். ஆண்மகன் மடலூர்தல் மரபேயன்றி, கன்னிப் பெண் மடலூர்ந்ததாக நூல்கள் கூறுவதில்லை ஆயினும் இத்தகைய பொது நிலைக்கும் அப்பாற் பட்டு ஆழ்வார் தாம் இறைவனிடம் கொண்டுள்ள பேரன்பை விளக்குகிறார்.

திருமங்கையாழ்வார் :

''நான் என் நாயகனை (இறைவனை)க் கண்டு கைகூப் பித் தொழுவேன். அவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. என்றால் பெண் இருக்கும் இடத்திற்கும் தெருக்களுக்கும் வேதவிற்பன்னர்கள் வசிக்கும் இடங்களிலும், அப்பெரு மானுடைய பக்தர்கள் கூடியிருக்கும் இடத்திலும் நிலவுல கத்தை ஆளும் அரசர்கள் கூட்டத்திலும், நாட்டின் உட் பகுதிகளிலும் சென்று இப்பெருமான் எனக்கு அருள் புரி யாததை எடுத்துச் சொல்வேன்.

பெரிய திருமடல் :

"கல்நவில் தோள்காளையைக்கண்டு ஆங்குக் கைதொழுது
என்னிலைமை யெல்லாம் அறிவித்தால் எம்பெருமான்
தன்னருளும் ஆகமும் தாரானேல்—தன்னைநான்
மின்னிடையார் சேரியிலும் வேதியர்கள் வாழிடத்தும்
தன்னடியார் முன்பும் தரணிமுழுது ஆளும்
கொன்னவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும்நாட்டகத்தும்
தன்னிலைமை யெல்லாம் அறிவிப்பன்

8. உவகை

[செல்வ நிலை அறிவுச்செல்வம் முதலியவற்றைக் கொண்டதால் ஏற்படுவது உவகை. அருட் செல்வத்தைப் பெற்றதால் பேருவகை தோன்றும்.]

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

தெய்வ வழிபாடு செய்பவர் இறைவன் நாமத்தைக் கூறி உவகை எய்துவர்.

"பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

என்பது பக்தர்கள் கோட்பாடு

அப்பர்

நாம் எதை எதை இனியது எனக்கருதுகிறோமோ அதைவிட இனிமை யுடைத்து இறைவனை நினைத்தல். பலவகைப் பழங்களைவிட இனியவர் இறைவர். எத்தகைய இன்ப வாழ்க்கையிலும் கிடைக்கப் பெறும் இன்பத்தைவிட இறைவனைத் தியானிப்பதில் கிடைக்கும் பேறு இனிமையுடையதாக இருக்கும். இடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் எவ்வாறு உள்ளான் எனில்.

''கனியினும கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே''

சமநிலை

[சாந்தத்தைத் தோற்றுவிக்கும் சுவை இது அரியதொரு சாதனையாகும்.] இறைவன் செயல்கள் எப்பொழுதும் நமக்கு நன்மையைச் செய்வனவாக உள்ளன. எனினும் நாம் அவற்றின் உண்மையை அறிந்து கொள்ளமுடிவதில்லை. ஆனால் ஆன்றோர்கள் இவ்வுண்மையை அறிந்துள்ளார்கள். அதை உணர்ந்தவர்கள் இருக்கும் நிலை சமநிலை அதை நமக்கு எடுத்துச் சொல்லுகிறார்.


இறைவனே என்னை ஆட்கொண்டாய் நீ நன்று செய்யினும் அதைப் பற்றி நான் கருதத்தக்க தொன்றுமில்லை. எனினும் நீ நன்றே செய்வாய்—நன்மை அல்லாதவற்றைச் செய்யவே மாட்டாய். பிழை செய்வாய்? பிழை செய்வாயா? (செய்யமாட்டாய்) இதைப் பற்றி எனக்கு யாதொன்றுமில்லை.

மாணிக்க வாசகர்

குழைத்தபத்து

''அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமையெல்லாமும்
குன்றே யனையாய் என்னை யாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.''

——o——



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்

[இப்படம் உதவியவர் : திரு. கா. நடேச முதலியார்]